# ஸ்ரீதுளஸி மஹாத்ம்யம்

**(ஹரிதாச சாகித்யத்தில் ஸ்ரீதுளஸி)**

கன்னட புத்தகம் எழுதியவர்:

திருமதி. வீணா ராம்பிரசாத்,
பெங்களூரு

தமிழில்

**‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்**
89044 58276. haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

# ஸ்ரீதுளஸி மஹாத்ம்யம்
# (ஹரிதாச சாகித்யத்தில் ஸ்ரீதுளஸி)

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால்
ஸ்ரீபுரந்தரதாசர் ஆராதனை நாளான - 1-02-2022
அன்று வெளியிடப்பட்டது.

**தொடர்புக்கு:**
‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
8904458276 haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

**சலுகை விலையில் இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு பொருளுதவி புரிந்த ஹரி பக்தர்கள் அனைவருக்கும் நன்றி!!!**

**ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 4 |
| 2. | வாழ்த்துரை | 6 |
| 3. | புராணங்களில் ஸ்ரீதுளஸியின் விளக்கம் | 12 |
| 4. | துளஸியின் தோற்றம் | 14 |
| 5. | துளஸியில் தேவதைகளின் சன்னிதானம் | 16 |
| 6. | வேத உபநிஷத்களில் துளஸியின் குறிப்புகள் | 19 |
| 7. | புராணங்களில் ஸ்ரீதுளஸியின் மகிமை | 20 |
| 8. | துளஸி தேவதைகளாலும் பூஜிக்கப்படுகிறாள் | 23 |
| 9. | துளஸி பூஜையின் சிறப்பு | 28 |
| 10. | நம் பாரதிய தர்மம் | 37 |
| 11. | துளஸி காஷ்ட சந்தனம் | 38 |
| 12. | துளஸி ஸ்தோத்திரம் | 41 |
| 13. | ஷோடஷோபசாரங்களால் துளஸி பூஜை | 46 |
| 14. | துளஸியை விதி விதானங்களாலேயே பார்க்க வேண்டும் | 49 |
| 15. | துளஸியின் பவித்ரத்தன்மை | 51 |
| 16. | ஸ்ரீதுளஸியில் நவ வித பக்தி | 54 |
| 17. | துளஸியின் மகிமை | 56 |
| 18 | துளஸியின் மகத்துவம் | 62 |
| 19 | துளஸியின் சேவை பாப பரிகாரம் செய்கிறது | 74 |
| 20 | ஹரிதாசர்களின் கிருதிகளில் துளஸியின் ஸ்துதிகள் | 79 |
| 21 | மஹிளா ஹரிதாஸினியர்களின் கிருதிகள் | 139 |
| 22 | ஹரிதாசர்களின் கிருதிகளில் துளஸி | 145 |
| 23 | துளஸியின் பல பெயர்கள் | 151 |

# ஹரிதாச சாகித்யத்தில் துளஸி

## முன்னுரை

அணுரேணு த்ருணகாஷ்ட பரிபூர்ணனான கோவிந்தனுக்குப் பிறகு, மகாலட்சுமிதேவியே சராசர வஸ்துகளுக்கு அபிமானினியாக இருக்கிறாள்.

பகவந்தனின் பூஜை, லட்சுமிதேவி ஒருவளாலேயே சாத்தியம். ஆகையாலேயே தாசர், 'ஏனு தன்யளோ, லகுமி எந்த மான்யளோ, ஸானு ராகதிந்த ஹரிய தானே ஸேவெ மாடுதிஹளோ' என்றார். அடுத்தது, ஸ்ரீலட்சுமி நாராயணரின் சேவா பாக்கியம் கிடைத்திருப்பது ஜீவோத்தமரான முக்யபிராண தேவருக்கே. பிறகு அடுத்த பரிவார தேவதைகளுக்கு அவரவர்களின் தகுதிக்கேற்ப ஸ்ரீஹரியின் சேவை கிடைக்கிறது.

பூஜையில் முதல் இடம் - சாலிகிராமத்திற்கு. மூர்த்தி (ஷிலா) பூஜைக்கு ஆசார்ய மத்வர் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். அதாவது, பிரதிமையில் பகவந்தனை ஆவாகனம் செய்து பூஜிப்பது. ஸ்வயம்வ்யக்த சாலிகிராமத்தில், பகவந்தனின் நித்ய சன்னிதானம் இருக்கிறது. அதே போல, பூஜா திரவியங்களில் முக்கிய இடம் ஸ்ரீதுளஸிக்கு.

ஸ்ரீதுளஸியில் மகாலட்சுமியின் சன்னிதானம் இருக்கிறது. சாலிகிராமம் இல்லாமல் பூஜை இல்லை. ஸ்ரீதுளஸி இல்லாமல் தீர்த்தம் இல்லை. ஒவ்வொரு பூஜைப் பொருட்களுக்கும் ஒவ்வொரு அபிமானி தேவதைகள் இருக்கின்றனர். ஆனால், ஸ்ரீதுளஸியில் அனைத்து தேவதைகளும் நிலைத்திருக்கின்றனர். கங்காதி அனைத்து க்ஷேத்திரங்களும் ஸ்ரீதுளஸியில் நிலைத்திருக்கின்றன. ஸ்ரீதுளஸியில் விலக்கப்பட வேண்டிய பொருட்கள் என எதுவுமே இல்லை. மிருத்திகை, தளம், வேர், காஷ்ட, ஸ்ரீதுளஸியின் மேல் வீசும் காற்று, மற்றும் ஸ்ரீதுளஸியில் பட்ட நீர் என அனைத்துமே மிகுந்த பவித்ரமானவை. ஸ்ரீதுளஸி இல்லாமல் எந்த தேவ காரியமும் இல்லை.

தூப, தீப, ஜப, தாரண, பிராஷன, மார்ஜ்ஜன, அலங்கார, நைவேத்ய, ஹோம, ஆபோஷன, போஜன முதலான அனைத்து ஷோடஷோபசாரங்களிலும் ஸ்ரீதுளஸி கண்டிப்பாக தேவை. பஞ்ச மஹாயக்ஞுங்களான பிரம்ம யக்ஞு, பித்ரு யக்ஞு, தேவ யக்ஞு, பூத யக்ஞு, மனுஷ்ய யக்ஞு என அனைத்திலும் ஸ்ரீதுளஸிக்கு முக்கிய இடம். ஸ்ரீதுளஸி, தேவலோகத்தின் செடி ஆகும். இவளில் சிறப்பான ஒரு நறுமணத்தை பகவந்தன் வைத்திருக்கிறான். இது ஒரு வகையில் மருந்தாகவும் பயன்படுகிறது. அனைத்து நோய்களுக்கும் சஞ்சீவினி என்று ஸ்ரீதுளஸியை உபநிஷத்கள் புகழ்கின்றன. அவளில் நித்ய மகாலட்சுமி சன்னிதானம் இருக்கிறது என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. வைஷ்ணவி, விஷ்ணு ஹ்ருதயெ, விஷ்ணு வல்லபெ, நாராயண மன:ப்ரியெ, பங்கஜ தாரிணி, பிரம்மாணி, பகவதி, ஸர்வகல்யாணி, ஸர்வ ஸம்பத் பிரதாயினி - ஸ்ரீதுளஸி ஸ்தோத்திரங்களில் வரும் பெயர்கள், ஸ்ரீதுளஸியே மகாலட்சுமி என்று கொண்டாடப்பட்டிருக்கிறது. ஜாம்பவதியே ஸ்ரீதுளஸி.

ஜாம்பவதியில் ரமா சன்னிதானம் இருக்கிறது என்னும் வாக்கு இதற்கு சரியாகப் பொருந்துகிறது. ஸ்ரீதுளஸி ஜாம்பவதி ப்ரோக்தா, ஸ்ரீதுளஸியின் நறுமணத்தை முகராதவன், உயிரோடு இருந்தாலும் இல்லாதவன்.

**திருமதி. வீணா ராம்பிரசாத்**
**பெங்களூரு**

# வாழ்த்துரை

ஸ்ரீ துளஸி ஸ்ரீ ஹரிக்கு மிகவும் பிரியமானது. ஸ்ரீ ஹரியின் பூஜையில் மிக முக்கியமானது. ஸ்ரீ துளஸி. ஸ்ரீ தன்வந்தரி ரூபி பரமாத்மாவின் ஆனந்த பாஷ்பத்திலிருந்து ஜனித்தவள் என்பதைக் குறிப்பிடும் வகையில் ஸ்ரீ விஜய தாஸர் தன்வந்தரி ஸுளாதியில் ஸ்ரீ தன்வந்தரியைத் துதிக்கையில் 'ஸ்ரீ துளஸி ஜனக' என வர்ணனை செய்துள்ளார். ஸ்ரீ ஹரியின் பூஜைக்கான பதார்த்தங்களான ஜலம், புஷ்பம், கந்தம் முதலானவகைகளில் உள்ள ஸ்ரீ ஹரியின் ஸன்னிதானத்தை ஹரிகதாம்ருத ஸாரம் - விபூதி ஸந்தியிலே வர்ணித்துள்ள ஸ்ரீ ஜகன்னாத தாஸர், ஸ்ரீ துளஸியில் ஸ்ரீ ஹரி 5317 ரூபங்களில் ஸன்னிதானம் கொண்டுள்ளதை "மூரெரடு ஸாவிரத மேல் முன்னூரஹதினேளெனிப ரூபவு ஸ்ரீ துளஸி தளதி" என்பதாக விளக்கியுள்ளார்.

எல்லாத் தீர்த்தங்களும் எல்லாத் க்ஷேத்திரங்களும், எல்லா தேவதைகளும், வேத சாஸ்திரங்களும் கூட ஸ்ரீ துளசியில் ஸன்னிதானம் கொண்டுள்ளதை, "யன்மூலே ஸர்வதீர்த்தானி யன்மத்யே ஸர்வ தேவதா : யதக்ரே ஸர்வ வேதாஸ்ச துளஸி த்வாம் நமாம்யஹம்" போன்ற ஸ்தோத்திரங்களிலும், "மூலதலி ஸகல தீர்த்தகளுண்டு தன்மத்யதலி காலமீரதெ நதநதிகளு தேவகண மேலே தள ஒந்தொந்தரலி ஒந்தொந்து மூருதியு வாலயவாகி இஹவு" என ஸ்ரீ விஜய தாஸரின் ஸ்ரீ துளஸிப் பற்றிய தாஸ ஸாஹித்யத்திலும் காணலாம்.

பகவான் கீதையில் "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி" எனத் தமக்கு பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்படுகின்ற ஓர் இலை, புஷ்பம், பழம் மற்றும் ஜலம் போன்றவற்றைத் தான் ப்ரீதியுடன் ஏற்று அனுக்ரஹம் புரிவதாகக் கூறுகையில், பகவான் இங்கு பிரதானமாக குறிப்பிட்டுள்ளது ஸ்ரீ துளஸி தளத்தையே ஆகும் என அறிய வேண்டும். ஆதலால்தான் ஸ்ரீ ஹரியின் பூஜையில்

அபிஷேகம்,அர்ச்சனை, நைவேத்யம் மற்றும் ஸமர்ப்பணம் என அனைத்திலும் அங்கம் வகிக்கும் மிக இன்றியமையாத வஸ்துவாக ஸ்ரீ துளஸி உள்ளது. எவ்வளவு மிக விலை உயர்ந்த பதார்த்தங்கள் மற்றும் வைபவங்கள் இருப்பினும் ஸ்ரீ துளஸி இல்லாத பூஜையை ஸ்ரீ ஹரி ப்ரீதியுடன் ஏற்பதில்லை என்பதை ஸ்ரீ புரந்தர தாஸர் "ஒல்லனோ ஹரி கொள்ளனோ எல்ல ஸாதனவித்து ஸ்ரீ துளஸி இல்லத பூஜெ" என்ற பதத்தினால் குறிப்பிட்டுள்ளார்.

"துளஸி இல்லத தீர்த்த எந்தித்தரு வ்யர்த்த", "துளஸி இல்லத பூஜெ நரகக்கிளுவோ ஹாதி" என்பதாக ஸ்ரீ விஜய தாஸரும் ஸ்ரீ துளஸி இல்லாமல் செய்யும் பூஜை, தீர்த்தம், நைவேத்யம் என அனைத்தும் வ்யர்த்தம் என்பதாக விவரித்துள்ளார். "தளவித்தரே ஒளிது, இல்லத்தித்தரே காஷ்ட, எலெ ம்ருத்திகெகளிந்த பூஜெ மாடலுபஹுது, துளஸி ஒணகித்தரு லேஸ தோஷகளில்ல, துளஸி விரஹிதவாத பூஜெயது ஸல்லது", "துளஸீ துளஸீ எந்து ஸ்மரணெயாதரு மாடி" என்பதாக துளஸி இல்லை எனில் காஷ்டம், அதுவும் இல்லை எனில் துளஸி உள்ள இடத்தின் மண் (ம்ருத்திகை), அதுவும் இல்லை எனில் "துளஸீ துளஸீ" என அழைத்து ஸ்மரணையுடன் கூட பூஜை செய்திடினும் ஸ்ரீ ஹரி ஏற்கிறான் என்பதாக ஸ்ரீ விஜய தாஸர் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீ புரந்தர தாஸர் "துளஸீ துளஸீ எந்து கூகிதரெ நம்ம புரந்தர விட்டல ஒலிவா" என்பதாகக் குறிப்பிடுகிறார்.

12 கோடி ஸ்வர்ண புஷ்பத்தை ஸமர்ப்பணம் செய்வதைக் காட்டிலும் பல மடங்கு பலன் பக்தியுடன் துளசி தளத்தைக் கொண்டு ஸ்ரீ ஹரிக்கு கந்தோதகத்துடன் அபிஷேகம் செய்து பூஜிப்பவனுக்கு பகவான் முக்தியையே அளிக்கிறான் என்பதை ஸ்ரீ புரந்தர தாஸர் "ஒந்து தள ஸ்ரீ துளஸி பிந்து கந்தோதகவ இந்திரா ரமணகெ அர்பிதவென்னலு" என்ற பதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ ஹரியின் பூஜை என்று மட்டுமில்லாமல் நாம் செய்யும் ஸ்நானம், ஹோமம், தானம், பித்ரு காரியங்கள் என அனைத்தையுமே ஸ்ரீ துளஸியுடன் செய்வது அவசியம் என சாஸ்திரங்களில் குறிப்பிட்டுள்ளதை ஸ்ரீ புரந்தர தாஸர் "ஸ்னான தானக்கே துளஸி ப்ரயோஜன துளஸி புரந்தர விட்டலகெ அதிப்ரிய துளஸி" எனத் தமது உகாபோகங்களில் விளக்கியுள்ளார். துளஸியுடன் செய்யும் ஸ்ராத்தத்தினால் பித்ருக்கள் திருப்தி அடைகின்றனர் என்பதை "துளஸி சாயாயாம் பித்ரு திருப்தி:" என்ற தர்ம ஸிந்து வாக்கியத்தின் மூலமாக அறியலாம்.

துளஸி மஞ்சரியினால் செய்யும் அர்ச்சனை இஹத்தில் அனைத்து கஷ்டங்களையும் பரிஹாரம் செய்து, மோக்ஷத்தையும் அளிக்கக்கூடியது என்பதை "துளஸீ மஞ்ஜரீபி: ஹரிஹரார்ச்சனே முக்தி: பலம்" என்ற வாக்கியத்தினால் அறியலாம். புராணங்களில் விவரிக்கப்பட்டுள்ள ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் லீலா வினோதங்களில் ஒன்றான ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம் சரித்திர கட்டத்தில், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அமர்ந்த தராசு தட்டுக்கு இணையாக மற்றொரு தட்டில் எவ்வளவு பொன், வைரம், வைடூரிய ஆபரணங்களை வைத்தாலும் அசைந்து கொடுக்காத தராசு தட்டானது, ஸ்ரீ ருக்மணி தேவி பக்தியுடன் ஸமர்ப்பணம் செய்த துளஸி தளத்திற்கு இறங்கி பகவான் அனுக்ரஹம் புரிந்தது, பக்தியுடன் ஸமர்ப்பணம் செய்யும் ஸ்ரீ துளஸி தளத்திற்கு ஸ்ரீ ஹரி அருள்புரியும் விதத்தைக் காட்டுவதாக விளங்குகிறது.

துளஸியை நீரூற்றி, பூச்சிகள் அண்டாமல் காத்து, ஸ்பர்ஸம் செய்து நமஸ்கரிப்பதாலேயே பாவங்கள் பரிஹாரம் ஆகின்றன என்பதை "ரோபன, பாலன, ஸ்பர்ஸை: பாபக்ஷய:" என்ற வாக்கியம் விளக்குகிறது. ஸ்ரீ துளஸி பிருந்தாவனம் உள்ள இடத்தில் யம பயம் திருட்டு பயம் இல்லை என்பதை "துளஸீ ஷோபித க்ருஹே யமகிங்கரா: ந ஆயாந்தி ||" போன்ற

வாக்கியங்கள் விளக்குகின்றன. அதனாலே புருஷர்களுக்கு ஸந்தியாவந்தனம், துளசியுடன் கூடிய ஸ்ரீ ஹரியின் பூஜை எவ்வளவு முக்கியமானதாக கூறப்பட்டுள்ளதோ, அதேபோல் ஸ்திரீகளுக்கும் ஸ்ரீ துளஸி பூஜையானது மிகவும் அவசியமானதாக சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. துளஸி பிருந்தானத்திற்கு தினமும் கோலமிட்டு, ஜலம் விட்டு, மஞ்சள், குங்குமம், புஷ்பத்தினால் பூஜைகள் செய்து, பிரதக்ஷிணம் மற்றும் நமஸ்காரம் செய்வதாலேயே சகலவிதமான நன்மைகளையும் அடையும் வகையில் சாஸ்திரங்கள் வழிகோலுகின்றன. ஸ்ரீமன் மத்வாச்சாரியார் தமது கிருஷ்ணாம்ருத மஹார்ணவத்தில் நிர்மால்ய தீர்த்தம், நைவேத்யம் முதலானவற்றை துளஸியுடன் ஸ்ரீ ஹரிக்கு ஸமர்ப்பணம் செய்து ஸ்வீகரிக்க மகாபாதகங்கள் நாஸம் அடைகின்றன என்பதை "துலஸ்யாஸ்து ரஜோஜுஷ்ட நைவேத்யஸ்ய ச பக்ஷணம் நிர்மால்யம் ஸிரஸா தார்யம் மஹா பாதக நாஸனம்" போன்ற ஸ்லோகங்களில் விவரித்துள்ளார். இதை அனுசரித்து ஸ்ரீ விஜய தாஸரும் நிர்மால்ய துளஸியை கர்ணத்தில் எப்போதும் தரித்தவனை யம பயம் அண்டாது என்பதை "நிர்மால்யவனு ஸதத கர்ணதலி தரிஸித மனுஜ காலனாளிகெ ஸிலுகனைய்யா" எனக் குறிப்பிட்டுள்ளார். "நோடித மாத்ரகெ தோஷ ஸம்ஹாரிகெ", "கனவாத பாபகளன்ன மாடித்தரு தன்னதள ஒந்தன்ன கர்ண தல்லிட்டரெ தன்யராகி மாடுவ தயவந்தெகெ" என ஸ்ரீ புரந்தர தாஸரும் இதையே விளக்கியுள்ளார்.

நமது சம்பிரதாயத்தில் உத்தான த்வாதசி அன்று ஸாயங்கால வேளையில் சாலிக்கிராமத்திலும் நெல்லி மரத்திலும் ஸன்னிதானம் கொண்டுள்ள கார்த்திக தாமோதரனுக்கு ஸ்ரீ துளஸியை விவாகம் செய்யும் உற்சவம் வழக்கமாக உள்ளது.

ஸ்ரீ துளஸியை பறிப்பதற்கும் உபயோகப்படுத்துவதற்கும் கூட சாஸ்திரங்களில் விதி முறைகள் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீ துளஸியை வெறும் கையிலும், குளிக்காமலும், ராத்திரி

வேளையிலும், சாப்பிட்ட பிறகும் பறிக்கலாகாது. ஸ்திரீகள் துளஸியை பறிக்கக் கூடாது. ஞாயிறு, வெள்ளி, செவ்வாய் போன்ற தினங்களிலும், பௌர்ணமி, அமாவாஸை, கிரஹணம், ஸங்க்ரமணம், வைத்ருதி மற்றும் வ்யதிபாத யோகம், பித்ரு ஸிரார்த்த தினம் போன்ற காலங்களிலும் பறிக்கலாகாது என்பது போன்ற நியமங்களை ஸ்ரீ விஜய தாஸரும் "ரவி மங்களவார வைத்ருதி வ்யதிபாத ரவி ஸஸி ஸங்கம பர்வணி புண்ய கால திவஸ த்வாதஸி ஸ்ரேஷ்ட மொதலாத உபராக பித்ரு ஸிரார்த்ததிவுகளலி தெகெயதிரி நவவஸனவ பொத்து ஊடவமாடி தாம்பூல ஸவியுத்த முட்டதிரி யுவதி ஸூத்ரரிம் தரிஸுவுது உசிதவல்ல வெந்து திளிது கொண்டாடு" போன்ற பதங்களில் விளக்கியுள்ளார்.

மத்வ மதப் பரம்பரையில், ஸ்ரீ ஸுரேந்திர தீர்த்தர் ஒருமுறை மானசீகமாக துளஸி வனத்தில் உள்ள துளஸி அனைத்தையும் ஸ்ரீ ஹரிக்கு ஸமர்ப்பணம் செய்ததும், அந்த வனத்தில் இருந்து பறித்த துளசி தளத்தைக் கண்ட மாத்திரத்தில் அவை நிர்மால்யமானதைத் தனது ஞானதிருஷ்டியால் ஸ்ரீ வியாஸராஜர் உணர்த்திய மகிமையும் மிகவும் பிரசித்தம். பகவானுக்கு பக்தியுடன் மானஸீகமாக ஸமர்ப்பிக்கப்படும் துளஸிக்கும் மகத்துவம் அதிகம் என்பதையே இது உணர்த்துகிறது.

கலியுக காமதேனு கற்பக விருக்ஷம் எனப் போற்றப்படுகின்ற ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர், மிருத்திகா பிருந்தாவன ரூபத்திலும் பல மகிமைகள் புரிவதற்கு அந்த ம்ருத்திகையானது துளஸி வனத்தில் இருந்து பெறப்பட்டு, ஹோமம், ஜபம், பாராயணம், செய்யப்பட்டு மூல பிருந்தாவன ஸந்நிதானத்தில் வைத்துத் தரப்படுவதும், அதில் ஹரி, வாயு, குரு மகனீயர்களின், குருராஜரின் ஸன்னிதானம் உண்டாவதும் ஒரு முக்கிய காரணமாகும்.

இத்தகைய மஹிமை வாய்ந்த ஸ்ரீ துளஸியை பக்தியுடன் ஆராதித்து ஸ்ரீ ஹரியின் ப்ரீதிக்கு பாத்திரராவோமாக!!

இத்தகைய ஸ்ரீ துளஸியின் மஹிமையைப் பற்றி ஹரி தாஸர்கள் தமது ஸாஹித்தியங்களில் விளக்கியுள்ளதை பாமரர்களும் அறியும் வண்ணம் கன்னடத்தில் "ஹரி தாஸ ஸாஹித்தியத்தில் ஸ்ரீ துளஸி" என்ற பெயரில் ஸ்ரீமதி. வீணா அவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ளதை 'ஜகன்னாத கேஸவ' திரு. சத்தியநாராயணன் அவர்கள் மிக அழகாக தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். அவர் சமீபகாலத்தில் வெளியிட்டுள்ள பலதரப்பட்ட தாஸ ஸாஹித்திய படைப்புகளைப் பற்றிய புத்தங்களின் வரிசையில் இதுவும் பெருமை சேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை. அவருக்கு துளஸி ஸமேத ஸ்ரீ தாமோதரன் ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வர்யம் மற்றும் மனச்சாந்தி போன்றவற்றை அருளி, இதுபோல் இன்னும் பல புத்தகங்களை வெளியிட அருள் புரியுமாறு ப்ரார்த்தனை செய்கிறேன்.

**ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து** !!

மேடவாக்கம், சென்னை ' பிரஸங்க பூஷணம்',

'பிரவசன பூஷணம்','மத்வரத்னா'

9th January 2022 **S. லக்ஷ்மிபதிராஜா**

# அத்தியாயம் 1
# அ. புராணங்களில் ஸ்ரீதுளஸியின் விளக்கம்

சாலிகிராமத்தில் பகவந்தனின் நித்ய சன்னிதானம் இருப்பதைப் போல, ஸ்ரீதுளஸியில் லட்சுமிதேவியின் சன்னிதானம் இருக்கிறது. ஆகையாலேயே, ஸ்ரீஹரிக்கு, ஸ்ரீதுளஸி மிகவும் பிரியமானவளாக இருக்கிறாள்.

யஸ்யா தேவ்யாஸ்துலா நாஸ்தி விஷ்வேஷு நிகிலேஷு ச |
துளஸி தேன விக்யாதா தாம் யாமி ஷரணம் ப்ரியே ||
-- பிரம்மவைவர்த்த புராண

உலகில் உள்ள அனைத்து வ்ருக்ஷங்களில் இதற்கு சமானமான வ்ருக்ஷம் எதுவும் இல்லை. ஆகவே, இதற்கு துளஸி என்று பெயர் வந்திருக்கிறது. சாலிகிராமம் இல்லாமல் தீர்த்தம் இல்லை. துளஸி இல்லாமல் பூஜை இல்லை.

இந்துக்களின் வீடுகளில் துளஸிக்கு முதன்மையான இடம். நித்ய விதிகளில், வைஷ்வதேவாதி தர்ப்பணங்களில் இது மிகவும் முக்கியம். இப்படியான இலை (செடி) உலகில் எங்கேயும் இல்லை.

'துலாம் ஸ்யதி இதி துளஸி'. துளஸி என்னும் பெயரே சொல்வதைப் போல, துலனா (ஒப்புமை) இல்லாதவள். அதாவது, சரிசமம் இல்லாதவள் என்று அர்த்தம். துளஸிக்கு ஒரு சிறப்பான நறுமணம் உண்டு. இந்த நறுமணத்துடன் வேறு எந்த நறுமணத்தையும் ஒப்பிடுவது சாத்தியம் இல்லை. இது தேவலோகத்தின் புஷ்பம் ஆகும். மூலிகை குணம் நிறைந்தது. ப்ருஹத் தர்ம புராணத்தில் சொல்லப்பட்டுள்ள துளஸியின் அர்த்தம் மிகவும் சிறப்பானது. பிரம்ம வைவர்த்த புராணத்தில் சொல்லியிருப்பதைப் போல, எந்த தேவதைகளும், துளஸிக்கு சமானம் அல்ல.

தகாரோ மரணம் ப்ரோக்தம் தத்யோக: ஸ்யாதுகாரத: |
ம்ருதா லஸதி ஸேத்யேவம் துலஸீத்யேவ கீயதே ||
-- பிரம்ம வைவர்த்த புராணம்

துளஸி என்னும் சொல்லில், த்-உ-லஸி என்னும் எழுத்துக்கள் இருக்கின்றன. த் என்றால் மரணம் என்று அர்த்தம். உ என்றால் இறந்தவர் என்று அர்த்தம். லஸதி என்றால் ஒளிர்கிறார் என்று பொருள். அதாவது, எந்த மனிதர், துளஸியின் ஸ்மரணைகளை செய்து, இறக்கிறாரோ அவர், ஸ்வர்க்காதி உலகங்களில் ஒளிர்ந்து கொண்டிருக்கிறார் என்று அர்த்தம்.

இன்னொரு அர்த்தத்தில், இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் சாமர்த்தியமும் துளஸிக்கு இருக்கிறது. ஏனெனில், துளஸி தோன்றியதே அமிர்த கலசத்திலிருந்து. அதுவும், தன்வந்திரி நாமக பரமாத்மனின் ஆனந்தக்கண்ணீரிலிருந்து பிறந்த இவள், மிகவும் அழகானவளாகவும் இருக்கிறாள்.

ஸ்தித: ப்ரதிதலேஷ்டஸ்யா மந்த்ரோ த்வாதஷவர்ணக: |
அதிஷ்டாத்ரீ தேவதா:sஸ்யாமாவாம் தேவீமஹேஷ்வரௌ ||
நாராயண உபாஸ்யோ:sஸ்யா: ப்ரியேயம் வைஷ்ணவீ மதா ||
-- ப்ரு.த.புராண

ஸ்ரீதுளஸியின் ஒவ்வொரு தளத்திலும் த்வாதச அக்ஷர மந்திரம் நிலைத்திருக்கிறது. இதன் அபிமானிகளாக பார்வதி பரமேஷ்வரர் இருக்கின்றனர். உபாஸ்ய மூர்த்தி சாட்சாத் நாராயணன். அவனுக்கு மிகவும் ப்ரியமானவள் துளஸி.

யதி நாராயணார்த்தே:sயம் கபோவ துலஸீதரு: |
தருமூலமஹம் ச ஸ்யாம் ப்ரியாயா: ப்ரியகாம்யயா ||
-- ப்ரு.த.புராண

நாராயணனுக்காக ஸ்ரீதுளஸி வ்ருக்ஷ ரூபத்தில் தோன்றியிருப்பதால், ஸ்ரீஹரியின் ப்ரீதிக்காக அதன் மூலத்தில் தானே நிலைத்திருப்பதாக மகாலட்சுமி சொல்கிறார்.

இயம் தனுர் நதீரூபா கண்டகீதி ச விஷ்ருதா |
பூதா ஸுபுண்யதா ந்ருணாம் புண்யா பவது பாரதே ||
-- பிரம்ம வைவர்த்த புராண

இவளின் தேகம் நதியின் ரூபத்தை ஏற்று, கண்டகி என்று பெயர் பெற்றாள். இது மிகவும் பவித்ரமும், மனிதர்களுக்கு அதிக புண்ணியத்தை தரக்கூடியதான நதியும் ஆகும்.

தவ கேஷஸமூஹாஷ்ச புண்யவ்ருக்ஷா பவந்த்விதி |
துலஸிகேஷ ஸம்பூதா துலஸீதி ச விஷ்ருதா ||
-- பிரம்ம வைவர்த்த புராண

உன் கேஷ சமூகங்கள் புண்ய வ்ருக்ஷங்கள் ஆகட்டும், துளஸியின் கேஷங்களிலிருந்து தோன்றியதால், துளஸி என்று பெயர் வரட்டும்.

த்ரிலோகேஷு ச புஷ்பாணாம் பத்ராணாம் தேவபூஜனே |
ப்ரதானரூபா துளஸி பவிஷ்யதி வரானனே ||
-- பிரம்ம வைவர்த்த புராண

மூன்று உலகங்களிலும் தேவபூஜையில், அனைத்து புஷ்பங்களையும் இலைகளையும்விட முக்கிய ரூபளாக துளஸி இருக்கிறாள்.

ஸ்வர்க்கே மர்த்யே ச பாதாலே வைகுண்டே மம ஸன்னிதௌ |
பவந்து துலஸீவ்ருக்ஷா வரா: புஷ்பேஷு ஸுந்தரி ||
-- பிரம்ம வைவர்த்த புராண

ஸ்வர்க்கத்தில், பூமியில், பாதாளத்தில் மற்றும் வைகுண்டமான என் சன்னிதியில் அனைத்து புஷ்பங்களையும்விட துளஸி சிறந்தவள் ஆகட்டும்.

## ஆ. துளஸியின் தோற்றம்

பாற்கடலை கடையும் சம்பவம் அனைத்து புராணங்களிலும் வந்துள்ளது. முன்னர் துர்வாசரின் சாபத்தினால் தேவேந்திரன் தன் செல்வத்தை இழந்தபோது, அதனை திரும்பப் பெறுவதற்காக, பிரம்மாதிகள் மற்றும் சுராசுரர்களுடன் பாற்கடலைக் கடைந்தனர். அங்கிருந்து அபூர்வ வஸ்துகள் கிடைத்தன. அவற்றில் ஐராவத, உச்சைஸ்ரவஸ் என்னும் குதிரை, பாரிஜாத மரம், கௌஸ்துபமணி, சந்திரன், மற்றும் மகாலட்சுமியும் அங்கிருந்து தோன்றினாள்.

தன்வந்தரி ரூபத்தினால், கையில் அமிர்த கலசத்தினை பிடித்துக்கொண்டு பரமாத்மன் வெளிப்பட்டான். தன் பக்தர்களைக் கண்டு, அவனுக்கு ஆனந்தக்கண்ணீர் வந்தது. அப்போது அதிலிருந்து, அனைத்து லட்சணங்களையும் கொண்ட, சர்வாங்க சுந்தரியும், பரம பாவனெயளான ஸ்ரீதுளஸி தோன்றினாள்.

இவ்வாறு, ஸ்ரீதுளஸி, உலகிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும், ஸ்ரீஹரியின் பூஜைக்கு ஏற்றதான யோகத்தைப் பெற்றாள். சர்வாலங்கார பூஷிதளான, மங்களகரமான அவளைப் பார்த்து, ஸ்ரீஹரி மகிழ்ந்து தன் துடையின் மேல் அமர்த்திக்கொண்டு, அனைத்து உலகங்களையும் பவித்ரம் ஆக்கு என்று வரம் அளித்தான். மகாலட்சுமி, பரமாத்மனின் வக்ஷஸ்தளத்தில் இருந்தால், ஸ்ரீதுளஸி, ஆனந்த பாஷ்பத்திலிருந்து தோன்றி ஜகன்மாதை ஆனாள்.

ஒவ்வொரு பொருட்களுக்கும் ஒவ்வொரு விதமான விசேஷம் இருக்கிறது. ஆனால், துளஸிக்கு அனைத்து விதமான மகத்துவமும் இருக்கின்றன. கங்கை எப்படி பவித்ரளோ, அப்படியே துளஸியும் மங்களகரளாக இருக்கிறாள். மகாலட்சுமி விஷ்ணுபத்னி. ஸ்ரீவிஷ்ணுவைக் கொண்டாடும் அனைத்து சாஸ்திரங்களின் அபிமானி தேவதை - சரஸ்வதி. ஸ்ரீதுளஸியின் பெயராலேயே ஸ்ரீஹரி மகிழ்கிறான்.

அஜாயந்த த்விஜஸ்ரேஷ்ட லோகஸ்ரேயோ விதாயகா: |
தத: பீயூஷ கலஷமஜராமரதாயகம் |
பிரணம்ய ஷிரஸம் விஷ்ணும் தாரயன்னம்ருதம் பரம் |
அவேக்ஷ்ய மனஸா ஸத்ய: பராம் நிர்வ்ருதிமாப ஹ |
தஸ்மின் பீயூஷகலஷே ததானந்தா ஸ்ருபிந்தவ: |
ந்ருபதத் துளசீ ஸத்ய: ஸமஜாயத மங்கலம் ||
ஸர்வலக்ஷண ஸம்பன்னாம் ஸர்வாபரண பூஷிதாம் ||
ஹரேலக்ஷ்மீம் ததுர்தேவா: துளஸீமம்ருதோத்பவாம் |
துளஸீமங்கமாரோப்ய ப்ரஸன்னவதனோ ஹரி: |
புனீஹி லோகானபிலானிஹி தஸ்ருவரம் ததெள ||
-- பத்ம புராணம்

ஸ்ரீஹரியின் ஆனந்தக் கண்ணீரிலிருந்து தோன்றியதால், உலகிற்கு ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய ஸ்ரீஹரியின் பூஜைக்கு மிகச்சிறந்த சாதனையாக இருக்கிறாள் ஸ்ரீதுளஸி. தன்வந்திரியின் கண்ணிலிருந்து தோன்றியதால், அனைத்து விதமான நோய்களுக்கும் சஞ்சீவினி எனப்படுகிறாள். அவளில், பரமாத்மனுடன், அனைத்து தேவதைகளும் நிலைத்திருக்கிறார்கள். அனைத்து பொருட்களிலும் ஒவ்வொரு தேவதைகள் அபிமானிகளாக இருக்கின்றனர். ஆனால், துளஸியில் அனைத்து தேவதைகளும் அபிமானிகளாக இருக்கின்றனர். 33 கோடி தேவதைகளும் இவளில் நிலைத்திருக்கின்றனர். துளஸியின் சேவையினால் உத்தம உலகமே கிடைக்கிறது என்று புராணங்கள் சொல்கின்றன. துளஸியை தொடர்ந்து எடுத்துக்கொண்டால், எந்தவொரு நோய் ஆனாலும் அது உடனடியாக குணம் ஆகிறது என்று ஞானிகள் சொல்கின்றனர்.

## இ. துளஸியில் தேவதைகளின் சன்னிதானம்

அணுரேணு த்ருணகாஷ்டங்களின் ஸ்ரீஹரி பரிபூர்ணனாக இருக்கிறான் என்று வேதங்கள் சொல்கின்றன. ஸ்ரீஹரி இல்லாத இடமே இல்லை. இப்படியிருக்கையில், துளஸிக்கு மட்டும் ஏன் இவ்வளவு சிறப்பு என்றால், பரமாத்மனுடன் இருக்கும் மகாலட்சுமியின் சன்னிதானம் துளஸியில் பரிபூர்ணமாக இருக்கிறது. ரமா நாராயணர் இருக்கும் இடத்தில், அவனுடைய பரிவார தேவதைகள் அனைவருமே நிலைத்திருக்கின்றனர். ஸ்ரீஹரியின் பிரசாதத்தினால் தேவதைகள், தத்வாபிமானி தேவதைகளாக நிலைத்திருக்கின்றனர்.

நாம் ஸ்னானம் செய்யும்போது கங்காதி தீர்த்தங்களை நினைக்க வேண்டும்; ஆன்ஹிக காலத்தில் திக்தேவதைகளை நினைக்க வேண்டும்; இவ்வாறு பல்வேறு செயல்களை செய்யும்போது வெவ்வேறு தேவதைகளை நினைக்கிறோம். இந்த அனைத்து தேவதைகளும், ஸ்ரீதுளஸியில் நிலைத்திருக்கின்றனர்.

யன்மூலே ஸர்வதீர்த்தானி யன்மத்யே ஸார்வதேவதா: |

யதக்ரே ஸர்வவேதாஷ்ச துளஸி த்வாம் நமாம்யஹம் ||
-- பத்ம புராணம்

துளஸி வ்ருக்ஷத்தின் மூல பாகத்தில் அனைத்து தீர்த்தங்களும், மத்ய பாகத்தில் அனைத்து தேவதைகளும், மேல் பாகத்தில் அனைத்து வேதங்களும் இருக்கின்றன. ஆகையால், துளஸியை வணங்குகிறேன் என்று இந்த ஸ்லோகம் சொல்கிறது. லட்சுமியின் சன்னிதானம் முழுமையாக இருக்கும் துளஸியில், தேவதைகளின் மனைவியரும் அவர்களின் கணவர்களுடன் சேர்ந்து நிலைத்திருக்கின்றனர்.

லட்ச்மி: சரஸ்வதி சைவ காயத்ரி சண்டிகா ததா |
ஷசிசான்யா தேவா பத்ரை: தத்புஷ்பேஷு வஸந்தி வை ||
--பத்ம புராணம்

மகாலட்சுமி, சரஸ்வதி, காயத்ரி, ஷசி, மற்றும் இதர தேவதைகளின் பத்னியரும் ஸ்ரீதளசி புஷ்பங்களில் நிலைத்திருக்கின்றனர்.

இந்த்ரோsக்னி: ஷமனஷ்சைவ நைர்ருதோ வருணஸ்ததா |
பவனஷ்ச குபேரஷ்ச தச்சாகாயாம் வஸந்த்யமீ ||
--பத்ம புராணம்

இந்திர, அக்னி, யம, நிர்ருதி, வருண, வாயு, குபேர, ருத்ர முதலான அனைத்து தேவதைகள், துளஸி வ்ருட்சத்தின் கிளைகளில் நிலைத்திருக்கின்றனர்.

இந்த அனைத்து தேவதைகளும் நம் தேகத்திலும் நிலைத்திருக்கின்றனர். இந்திரன் நம் மனதிற்கு அபிமானி. அக்னி, வாக் அபிமானி. துளஸியை, புருஷர் ஏற்றுக் கொள்ளும்போது, அவர்களுடைய வாக் செல்வம் அதிகரித்து, வேதம் முதலான சூக்தங்கள் சரியாக உச்சரிப்புக்கு வருவதுடன், ஆத்யாத்ம ஞானம் அதிகரித்து, ஸ்ரீஹரியின் கருணைக்கும் பாத்திரர் ஆகிறான். அப்படிப்பட்டவனின் வாக்கு, சத்ய வசனம் ஆகின்றன. துளஸியின் கிளைகளில் ருத்ரதேவர் நிலைத்திருக்கிறார். இவரே மனதிற்கும் அபிமானி. துளஸி காஷ்டத்தினை தேய்த்து, சந்தனத்துடன் சேர்த்து,

பரமாத்மனுக்கு சமர்ப்பித்து, பின்னர் அதனை நம் தேகத்தில் தரிப்பதால், நம் தேகம் தூய்மை ஆகி, முக்திக்கு சாதனம் ஆகிறது.

ஆதிவ்யாதிக்ரஹா: ஸர்வே விஷ்வே தேவாஷ்ச ஸர்வதா |
வஸதோ மனவஷ்மைவ ததா தேவர்ஷயோऽபிலா: |
வித்யாதராஷ்ச கந்தர்வா: ஸித்தாஷ்சாப்ஸரஸ்ததா |
துளஸீபத்ர மாஸ்ரித்ய ஸர்வதா நிவஸந்தி வை ||
-- பத்ம புராணம்

ஆதித்யாதி தேவதைகள், விஷ்வே தேவதைகள், அஷ்ட வசுக்கள், சதுர்தஷ மனுகள், தேவ ரிஷிகள் வித்யாதரர்கள், கந்தர்வர்கள், ஸித்தர், அப்ஸரா ஸ்த்ரீயர்கள் என இவர்கள் அனைவரும் ஸ்ரீதுளஸி வ்ருக்ஷத்தின் இலைகளில் பூர்ணமாக சன்னிதானம் கொண்டிருக்கின்றனர். துளஸியின் சேவையினால் கிருஹங்களின் பீடையும் நிவாரணம் ஆகின்றன.

காலையில் எழுந்து, துளஸி மிருத்திகையை தாரணம் செய்தே ஸ்னானம் செய்ய வேண்டும் என்னும் நியமம் இருக்கிறது. ஸ்ரீதுளஸியை வணங்குவதால் அனைத்து தேவதைகளையும் வணங்கியதைப் போல ஆகிறது. துளஸி மிருத்திகை தரிப்பது, ஜல ப்ரோக்ஷணம் செய்து கொள்வது, ஆகியவற்றை செய்தால், அனைத்து தீர்த்தங்களில் ஸ்னானம் செய்த பலன் வருகிறது. ஆகையால், சுத்தமான மனதுடன் துளஸியை வணங்க வேண்டும் என்று ஞானிகள் சொல்கின்றனர்.

துளஸிதல ஸம்மிஸ்ரம் தோயம் கங்காஸமம் விது: |
யோ வஹேச்சிரஸா நித்யம் த்ருதா பவதி ஜான்ஹவி ||
-- விஷ்ணு தர்மோத்தர புராண

துளஸி தளத்தில் தோய்ந்த தண்ணீர், கங்கைக்கு சமானம் என்பது புராண வாக்கியம். யார் துளஸி தளத்தில் இருக்கும் தண்ணீரை தலையில் ஏந்துகிறாரோ, அவர் கங்கையையே தாரணை செய்ததைப் போல ஆகிறான்.

# ஈ. வேத உபநிஷத்களில் துளஸியின் குறிப்புகள்

பரமாத்மனை அறிவதற்காக, ரிஷி முனிவர்கள், அனாதி காலத்திலிருந்து, காடுகளில் வசித்து, பழம் கிழங்குகளை மட்டுமே உண்டு, கடும் தவம் புரிந்து, தம் இதய கமலத்தில் ஸ்ரீஹரியின் சாட்சாத்காரத்தை பெறுகின்றனர். யாக, யக்ஞங்களால் ஸ்ரீஹரியின் தரிசனத்தை பெறுகின்றனர். வெவ்வேறு வெளிநாடுகளில் நாகரீகம் என்றால் என்னவென்றே தெரியாத காலகட்டங்களில், நம் பாரதத்தில் ரிஷி முனிவர்கள் யாக யக்ஞங்களில் துளஸி காஷ்டங்களின் பயன்பாடு மிகவும் சிறந்தது என்பதை அறிந்திருந்தனர்.

இப்படியாக அனாதி காலத்திலிருந்து துளஸியின் சிறப்பு அனைவராலும் அறியப்பட்டிருக்கிறது. ஸ்த்ரீ மற்றும் நான்காம் வர்ணத்தவர்களுக்கு, வேத மந்திரங்களை படிக்கும் தகுதி இல்லை என்பதால், எந்தவொரு சாஸ்திர சம்பந்தப்பட்ட விஷயங்களை அறிய வேண்டுமென்றால், அவர்கள் ஞானிகள் மூலமாகவே அறிந்து கொள்ளவேண்டும்.

வேத, உபநிஷத், மற்றும் புராணங்களால் நமக்கு அந்தந்த யுகங்களின் அறிவு கிடைக்கிறது. ஆனால், துளஸியைப் பற்றி அறிவதற்கு துளஸி- உபநிஷத் என்று ஒரு உபநிஷத் இருக்கிறது என்பதே இதன் சிறப்பிற்கு சாட்சி. துளஸியைப் பற்றிய குறிப்புகள் மிகவும் சிறந்ததாக இருக்கிறது. புராணங்கள் மூலமாகவே துளஸியைப் பற்றிய அறிவு நமக்கு சாத்தியம் ஆகியிருக்கிறது. ஹரிதாசர்கள், துளஸியைப் பற்றி அனேக விளக்கங்களைக் கொடுத்திருக்கின்றனர்.

வரலட்சுமி, ஸ்ரீதுளஸி, ப்ரீதிவிஷயகெ என்னும் ஸ்ரீஜகன்னாததாசரின் வாக்குகள், துளஸியே மகாலட்சுமி என்பதை நிரூபிக்கின்றன. ஸ்ரீசங்கர்ஷண ஒடெயரால் இயற்றப்பட்ட ஸ்ரீஹரிகதாம்ருத சாரத்தின் வியாக்யானத்தில், 'துளஸி ஜாம்பவதி ப்ரோக்தா' என்னும் புராண வாக்கியம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜாம்பவதி தேவியில், ரமா சன்னிதானம் விசேஷமாக இருக்கிறது.

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் தினமும், விடியலில் துளஸி வனத்திற்கு சென்று, அங்கிருக்கும் மகாலட்சுமியை வணங்கி, பிறகு முக்யபிராணனை வணங்கிக் கொண்டிருந்தார் என்பதை ஸ்ரீராகவேந்திர விஜயத்தில் பார்க்கிறோம். ஸ்ரீமத் பாகவதத்தில் துளஸி மகிமை விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது.

வைஷ்ணவி, விஷ்ணுவல்லபெ, விஷ்ணுப்ரியெ, மோட்சதாயினி, நாராயண மன:ப்ரியே, பக்திப்ரதே, ரூபத்தில் லட்சுமி, இலைகளில் ஸ்ரீ, கிளைகளில் கமல, புஷ்பங்களில் இந்திரா, பழங்களில் க்ஷீராப்தி ஸம்பவெ, ஆகிய வர்ணனைகள் பாகவதத்தில் இருக்கிறது. ஸர்வ ஸம்பத் பிரதாயினி, கரவீர புரவாஸினி, பகவதி, பிரம்மாணி, பங்கஜ தாரிணி, என்னும் பெயர்கள், ஸ்ரீதுளஸியே மகாலட்சுமி என்று தெளிவாக விளக்குகின்றன.

* ரமா ஸ்ரீ துளஸி ஸம்ஸ்தா
* ஷாலிக்ராமோ மஹாவிஷ்ணுஸ்துலஸி ஸ்ரீர்ன சம்ஷய:
* யதா ஸ்ரீஸ்துலஸி ஸம்ஸ்தா நித்யமேவ
* ப்ராணினாம் க்ருபயா லக்ஷ்மீ ஸ்துலஸி வ்ருக்ஷ மாஸ்ரிதா
* வ்ருக்ஷாதி வாஸமகமத் கமலா ச தேவிது:காதி

ஆகிய சாஸ்திர வசனங்கள், ஸ்ரீதுளஸியை ஸ்ரீமகாலட்சுமி என்றே புகழ்கின்றன. சாலகிராமத்தில் எவ்வாறு சாட்சாத் மகாவிஷ்ணுவின் சன்னிதானம் இருக்கிறதோ, அவ்வாறே துளஸியில், அந்தர்யாமியாக ஸ்ரீமன் மகாலட்சுமியின் சன்னிதானம் என்று இதிலிருந்து அறியலாம்.

## உ. புராண வாக்கியங்களிலிருந்து ஸ்ரீதுளஸியின் மகிமை

சனகாதிகள் ஸ்ரீஹரியின் தரிசனத்திற்காக வைகுண்டத்திற்கு வந்தபோது, ஜயவிஜயரின் செயல்களால் கோபம்கொண்டு, அவர்களுக்கு சாபம் கொடுத்தார்கள். இதன் பலனாக, அடுத்து அவர்கள் தானவராக பிறந்து, ஜயவிஜயர்கள் தங்களின் பாவத்தை போக்கிக் கொண்டனர். ஆனால், சனகாதிகள் அந்த நொடியில் கோபப்பட்டதால், தங்களின் செயலுக்காகவும் நொந்தனர். அப்போது

அவர்கள் வேண்டிக் கொண்டது என்னவெனில், எங்களுடைய வாக்குகள், உன்னுடைய பாதங்களில் துளஸியைப் போல இருக்க வேண்டும் - என்றனர். இந்த ஒரு வரம் மட்டும் கிடைத்துவிட்டால், நாங்கள் எந்த உலகில், எந்த யோனியில் எப்படி பிறந்தாலும் சரி - அதில் எங்களுக்கு எவ்வித பயமும் இல்லை. உன்னுடைய குணங்களால் எங்களுடைய காதுகள் நிரம்பியிருக்க வேண்டும் என்று வேண்டினர்.

துளஸியின் நறுமணத்தை முகராதவன், உயிரோடு இருந்தாலும் பிணம் என்றே அழைக்கப்படுகிறான். நாராயண பண்டிதாசார்யர் ஸ்ரீமத்வ விஜயத்தில், துளஸியின் மகிமையை பல இடங்களில் வர்ணித்திருக்கிறார்.

ஸ்ரீவேதவியாச ரூபியான ஸ்ரீஹரியின் காதுகளில், ஸ்ரீதுளஸி ஒளிர்ந்து கொண்டிருக்கிறாள். ஸ்ரீஹரியின் நிர்மால்யமான ஒரு துளஸி மாலையை, ஸ்ரீமதாசார்யரின் சிஷ்யர் ஒருவர் அவருடைய கழுத்தில் அணிவித்தார் என்னும் வாக்கியங்கள் மத்வ விஜயத்தில் காணப்படுகின்றன.

ஸ்ரீகிருஷ்ண மடத்தில் முக்யபிராண தேவரைவிட, முன்னரே துளஸிக்கு ஆரத்தி எடுக்கும் சம்பிரதாயம் இதனை தெளிவுபடுத்துகிறது.

க்ஷீராதமதனோத்துதே - என்னும் துளஸி பிரார்த்தனையிலும் துளஸியே மகாலட்சுமி என்று சொல்லப்பட்டுள்ளது. பத்ம புராணத்தில், உத்தர காண்டத்தில்:

1. துளஸி ஜாம்பவதீத்யுக்தா லக்ஷ்யாவேஷேன ஸம்யுதா |
தயா ஸம்பூஜயேத்விஷ்ணும் விஷ்ணுலோகமவாப்னுயாத் ||
2. ஸ ப்ரணம்ய துலஸிவனஸ்திதாயிந்திராம் ததனுதத் பதாஸ்ரிதம் |
வாயுனந்தன மவந்ததாதராதிந்திரேஷ கருணைக மந்திரம் ||
-- ஸ்ரீ. ரா.வி.

ஸ்ரீஜயதீர்த்தரின் பத்யமாலா கிரந்தத்தில் துளஸி பூஜா விதானங்களில், துளஸியின் மகிமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆதௌ தேவக்ருஹே ந்யஸ்ய கலஷான் ஸப்த பஞ்ச வா |
அஹரேத் துலஸீம் தூர்வாம் புஷ்பாண்யத்யதனானி ச ||
ஏகம் ஸ்யான்மதுபர்கேsன்யத் புனராசமனே ததா |
நிக்ஷிவேத் கந்ததுளசீ புஷ்பாதீனி யதாவிதி ||
துளஸீதள யுக்தேன ஷங்கதோயேன பூஜக: |
பூஜாத்ரவ்யாணி ஸர்வாணி ப்ரோக்ஷ்ய பீடம் ப்ரபூஜயேத் ||
தத்கர்ணிகாஸ்திதம் தேவம் நாராயணமஜம் விபும் |
உத்யத்பாஸ்வதிதி த்யாத்வா ஸமஷ்ட துலஸீகர: ||
அஸனஸ்தம் ஹரிம் ஸ்ப்ருஷ்ட்வா மூலத்வாதஷகம் ஜபேத் |
அர்ப்பயேத் கந்தபுஷ்பாணி மூலேன துளஸீம் ததா ||

இப்படியாக, ஸ்ரீதுளஸி, ப்ருஹத் கிரந்தங்களிலும், புராணங்களிலும், ஞானிகளின் வசனங்களிலும் புகழப்பட்டிருக்கிறாள். ருத்ரதேவர், துளஸியை தன் தலையில் தரித்திருக்கிறார் என்று ஸ்ரீமத் வாதிராஜர், சரஸ பாரதி விலாசத்தில் சொல்லியிருக்கிறார். ஸ்ரீதுளஸியில், ஸ்ரீஹரியின் 5317 ரூபங்கள் இருக்கின்றன.

த்ரேதா யுகத்தில் இருந்த ராமனின் நண்பனான ஜாம்பவந்தனின் மகள் ஜாம்பவதி. இவள் திருமண வயதை அடைந்தவுடன், ஸ்ரீராமனுக்கே கொடுத்து திருமணம் செய்ய வேண்டும் என்று ஜாம்பவந்தன் நினைத்திருந்தான். ஆனால், அந்த காலத்தில் அது நடக்கவில்லை. ஆகையால், ஏமாற்றம் அடையாமல், த்வாபர யுகத்தின் வரை காத்திருந்து, தன் மகளை, ஸ்ரீகிருஷ்ணனுக்கே கொடுத்து திருமணம் செய்தது சிறப்பு. இவ்வாறு, ஜாம்பவந்த, தனது ஷ்யமந்தக மணியை தன் மகளின் லக்ன காலத்தில் கிருஷ்ணனுக்குக் கொடுத்து, ஜாம்பவந்தனிடம் இருந்த கிருஷ்ண, ராமரின் பேத சிந்தனையை விலக்கினான். ராமனே கிருஷ்ணன் என்னும் அபேத சிந்தனையின் ஞானத்தைக் கொடுத்து ஜாம்பவந்தனை அருளினான் ஸ்ரீகிருஷ்ணன். இதனால், அறிவது என்னவென்றால், ஜாம்பவதி அதாவது, துளஸி அனாதி காலத்தவள் ஆவாள்.

# அத்தியாயம் 2

# துளஸி தேவதைகளாலும் பூஜிக்கப்படுகிறாள்

ஸ்ரீஹரியின் அன்பு, கருணை, துளஸியை உன்னத இடத்தில் வைத்திருக்கிறது. தேவதைகள் இவளில் நிலைத்து, ஸ்ரீஹரியின் ஆராதனையை செய்கின்றனர். அனைத்து யுகங்களிலும் பரமாத்மன் நடத்தும் துஷ்ட சிக்ஷணை, சிஷ்ட பரிபாலனை காரியங்களில் பங்கு பெற்று, அதற்காக பூலோகத்தில் அவதரிக்கின்றனர். இவ்வாறு, அவர்கள் அவதரித்து வந்து, பாவங்கள் சேரக்கூடாது என்று மற்றும் பூலோகத்தின் மக்களுக்கு சுலபமாக ஸ்ரீஹரி பிரசாதம் கிடைக்கும் வழியினை சொல்வதற்கும், சேவையை செய்திருக்கின்றனர். தாமும் துளஸியை பூஜித்து, ஹரி சேவையினால் தன்யர் ஆகியிருக்கின்றனர் என்று புராணங்களின் மூலம் சொல்லியிருக்கின்றனர். ஸனகாதிகள் தம்மால் பாவங்கள் வந்தபோது, துளஸியினாலேயே எப்போதும் ஸ்ரீஹரியின் பாதங்களை வணங்கிக் கொண்டிருந்தனர்.

ரோபிதா கோமதீதீரே ஸ்வயம் கிருஷ்ணேன பாலிதா |
ஜகத்திதாய துளஸி கோபீனாம் ரதிஹேதவே ||

உலகத்தின் நன்மைக்காகவும், கோபியரின் சுகத்திற்காகவும், ஸ்ரீகிருஷ்ணன், கோமதி தீரத்தில் துளஸியை நட்டு வளர்த்தான்.

வ்ருந்தாவனே விசரதா ஸேவிதா விஷ்ணுனா ஸ்வயம் |
கோகுலஸ்ய ச வ்ருத்யர்த்தம் கம்ஸஸ்ய நிதனாய ச ||
--பத்ம புராணம்

வ்ருந்தாவனத்தில் நிலைத்த துளஸி, கோகுலத்தைன் வ்ருத்திக்காகவும், கம்ஸனின் சம்ஹாரத்திற்காகவும், விஷ்ணுவால் வணங்கப்பட்டாள்.

வஸிஷ்டவசனாத்பூர்வம் ராமேண ஸரயூதடே |
ராக்ஷஸானாம் வதார்த்தாய ரோபிதா த்வம் ஜகத்ப்ரியே ||
--பத்ம புராணம்

அசுரர்களைக் கொல்வதற்காக, வசிஷ்டர் கூறியதைப் போல, சரயு நதிக்கரையில் ஸ்ரீராமன், துளஸியை நட்டான்.

ஷங்கரார்த்தம் புரா தேவ்யா உமயா ச ஹிமாலயே |
ரோபிதா பவவ்ருத்யர்த்தம் துளஸி த்வாம் நமாம்யஹம் ||

சிவனை திருமணம் செய்ய வேண்டும் என்று, பார்வதி இமாலயத்தில் துளஸியை நட்டாள். அத்தகைய துளஸியை நான் வணங்குகிறேன்.

இப்போதும் இமாலயத்தில் சில இடங்களில், மிகப்பெரியதான துளஸி மரங்கள் காணப்படுகின்றன. பூலோகத்து மக்கள் ஸ்ரீஹரியின் ப்ரீதிக்காக, துளஸியை நட்டு வளர்க்கின்றனர். தேவதைகளும்கூட ஸ்ரீஹரி ப்ரீதிக்காக, அவனின் பூஜைக்காக தேவலோகத்தில் துளஸியை நட்டு வளர்த்திருக்கும் விஷயம் நமக்கு புராணங்களிலிருந்து தெரிய வருகிறது.

யாமாஸ்ரீத்ய கதா: ஸ்வர்க்கமக்ஷயம் முனிஸத்தமா: |
ஹிதார்த்தம் ஸர்வலோகானாம் விஷ்ணுனா ரோபிதா புரா ||
--பத்ம புராணம்

துளஸியை வணங்கியே முனிஸ்ரேஷ்டர்கள் ஸ்வர்க்கத்தை அடைந்தனர். அனைத்து உலகின் மேம்பாட்டிற்காக விஷ்ணு முன்னர் துளஸியை நட்டான் என்பது ஐதீகமாக இருக்கிறது.

பக்தவத்ஸலனான ஸ்ரீராமசந்திரன், த்ரேதா யுகத்தில் யுகதர்மத்திற்கு ஏற்ப, துளஸியை நட்டான். எதிரிகளை வீழ்த்துவதற்கு, துளஸியை நடவேண்டும் என்றும், அதற்கு முன்னோடியாக தானே துளஸியை நட்டு, ஐந்து உலகத்து மக்களுக்கும் செய்தி கூறினான் ஸ்ரீராமன். சீதாதேவியும் தன் வனவாச காலத்தில் துளஸியை பூஜித்தாள் என்னும் குறிப்பு இருக்கிறது.

ஸீதயா ஸேவிதா பக்த்யா துளஸி தண்டகானனே
த்ரைலோக்யபாவனீ கங்கா யதா ஷாஸ்த்ரேஷு கீயதே ||
--பத்ம புராணம்

தண்டகாரண்யத்தில் ஸீதாதேவி, ஸ்ரீதுளஸியை பக்தியுடன் வணங்குகிறாள். மூன்று உலகங்களையும் பவித்ரமாக்கும் கங்கையைப் போல, உன் மகிமை சாஸ்திரங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

வியோகாத் ராமதேவஸ்ய த்வாத்வா த்வாம் ஜனகாத்மஜா |
அஷோகவனமத்யே து ப்ரியேண ஸஹ ஸாsகமத் ||
--பத்ம புராணம்

ஸ்ரீராமனைப் பிரிந்து, அசோகவனத்தில் இருந்த சீதை, அங்கிருந்த துளஸியை தியானித்தே, மறுபடி ஸ்ரீராமனிடம் சேர்ந்தாள்.

பாகவதத்தில் ஸ்ரீகிருஷ்ண துலாபாரத்தின் சமயத்தில், ருக்மிணி தேவி, பக்தியுடன், ஒரு தள ஸ்ரீதுளஸியை துலாபாரத்தின் ஒரு தட்டில் வைத்ததால், ஸ்ரீகிருஷ்ணன் மறுபடி ருக்மிணிக்கு கிடைத்தான் என்ற செய்தியை அறிகிறோம்.

துளஸி பூஜையின் மிகச்சிறந்த பலன்களை பார்க்கலாம். திருமணமான பெண்கள் தினம்தோறும் துளஸி பூஜையை செய்வதால், தாம்பத்யம் சிறக்கிறது என்று சாஸ்திரம் சொல்கிறது. மங்களகரமான துளஸி பூஜையை, சுமங்கலிகள் எப்போதும் செய்ய வேண்டும் என்று சொல்கின்றன. இதனை தெளிவாகக் கூறும் புராண வசனங்கள் உள்ளன. திருமணத்தின் சமயத்தில், கன்யை, மாங்கல்ய பிராப்திக்காக, பார்வதி பரமேஷ்வரரை பூஜிக்கிறாள். கௌரி பூஜை என்று அந்த பூஜை அழைக்கப்படுகிறது. கௌரிதேவியே ருத்ர தேவரைப் அடைவதற்காக இமாலயத்தில் துளஸியை வளர்த்து, பூஜிக்கிறாள்.

ஷங்கரார்த்தம் புரா தேவ்யா உமயா ச ஹிமாலயே |
ரோபிதா பவவ்ருத்யர்த்தம் துளஸி த்வாம் நமாம்யஹம் ||
--பத்ம புராணம்

முன்னர் இமாலயத்தில் உமாதேவி, சங்கரனை திருமணம் செய்ய வேண்டி, துளஸியை நட்டாள். அத்தகைய துளஸியை நான் வணங்குகிறேன். இமாலயத்தில் பல துளஸி மரங்கள்

வளர்ந்திருப்பதை இன்றும் காணமுடியும். அத்தகைய குளிர் பிரதேசத்திலும் இவை மிகவும் அழகாக வளர்ந்திருக்கின்றன.

ஸர்வாபிர் தேவபத்னீபி: ரோபிதே நந்தனே வனே ।
ஸ்வர்க்கே து மங்கலார்த்தம் ஹி ஸேவிதா த்வாம் நமோஸ்துதே ||

அங்கு அனைத்து தேவ பத்னியரும்கூட துளஸி செடியை நட்டனர். ஸ்வர்க்கத்தில் மங்களத்திற்காக அவளை வணங்கினர். அத்தகைய சிறப்பு வாய்ந்த துளஸியே, உன்னை நான் வணங்குகிறேன்.

துளஸிஸேவனா தேவ பக்ஷிராஜோ மஹாபல: ।
விஷ்ணுவாஹன தாம் ப்ராப்தோ மஹாராம்ருத முத்தமம் ||
--பத்ம புராணம்

துளஸியை வணங்கியதாலேயே, கருடன் மஹா வலிமையானவன் எனப்பட்டு, விஷ்ணுவின் வாகனமாக ஆகி, உத்தமமான அமிர்தத்தைக் கொண்டு வந்தான்.

ருஷ்யமூகே து வஸதாகபிராஜேன ஸேவிதா ।
தர்மாரண்யே கயாயாம் ச ஸேவிதா பித்ருபி: ஸ்வயம் ।
ஸேவிதா துளஸி புண்யா அத்ருனோ ஹிதகாம்யயா ||
--பத்ம புராணம்

ருஷ்யமூக பர்வதத்தில் நிலைத்திருந்த கபிராஜனான சுக்ரீவன், துளஸியை வணங்கினான். தர்மாரண்யத்தில் கயா க்ஷேத்திரத்தில் பித்ருகள்கூட துளஸியை வணங்குகின்றனர்.

துளஸீ ஸேவனா தேவஹேரம்போ விஜிதேந்த்ரிய: ।
தாரகம் ஸமரே ஹத்வாதேவஸேனாதிபோ பவத் ||
--பத்ம புராணம்

ஜிதேந்திரியனான ஸ்கந்தன்கூட துளஸியை வணங்கியே போரில் தாரகாசுரனைக் கொன்று, தேவ சேனாதிபதி எனப்பட்டான்.

ஆராத்ய நந்தி தேவேஷீம் ஷம்போராராதனக்ஷம: ।
அசலா சலாஷ்ச திக்பாகா: துலஸீ ஸேவயாऽனக ।

பபூவுர்பூமிதரணீ படீயாம்ஸ ஸுராயுஷ: |
--பத்ம புராணம்

சிறந்தவளான துளஸியை ஆராதனை செய்தே, நந்தீஸ்வரன், ருத்ர தேவரின் சேவையை செய்யும் வாய்ப்பினைப் பெற்றான். ஸ்தாவரஜங்கம ரூபத்தின் திசைகளின் பாகங்கள்கூட துளஸியின் சேவையினாலேயே பூமியை தரிக்கும் சாமர்த்தியத்தைக் கொண்டன.

ரம்பா வாsப்ஸரஸாம் மத்யேதுலஸி ஸேவயா புரா |
தேவேர்தத்தம் வரம் லப்த்வா தேவேந்த்ர ப்ரியதாமகாத் |
அதஷ்ச துளஸி பூஜ்யா விசேஷேண ஹரேர்தினே ||
--பத்ம புராணம்

அப்சரஸ்களில் ஒருவளான ரம்பா என்பவள், முன்னர் துளஸி சேவையை செய்ததால், தேவதைகள் கொடுத்த வரத்தினால், தேவேந்திரனுக்கு ப்ரியள் ஆனாள். ஆகையால், துளஸி விசேஷமாக ஹரிதினத்தன்று பூஜ்யள் எனப்படுகிறாள். துளஸியின் சேவையினாலேயே ஸாவித்ரி, ஷுபமங்களே என்று சொல்லப்பட்டு, பதிவிரதத்தைப் பெற்று பதியை காப்பாற்றிக் கொள்வதில் சாமர்த்தியம் பெற்றாள்.

துளஸீஸேவனாதேவ வாக்தேவி காமதாயினி |
ஸர்வவித்யா நிதிர்பூத்வா பிரம்மபத்னீ த்வமாப ஸா ||

துளஸியின் சேவையினாலேயே, வாக்தேவி, காமபிரதாயினி எனப்பட்டு, அனைத்து வித்யைகளுக்கும் நிதி எனப்பட்டு, பிரம்மனின் மனைவி ஆனாள்.

யாமாஸ்ரீத்ய கதா: ஸ்வர்க்கமக்ஷயம் முனிஸத்தமா: |
ஹிதார்த்தம் ஸர்வலோகானாம் விஷ்ணுனா ரோபிதா புரா ||
--பத்ம புராணம்

துளஸியை வணங்கியே முனிஸ்ரேஷ்டர்கள் ஸ்வர்க்கத்தை பெற்றனர். அனைத்து உலகங்களின் நலனுக்காக, முன்னர் விஷ்ணு துளஸியை நட்டார்.

ஷிவாஞயா ஷிவகண: ப்ருத்வீமாகத்ய ஹர்ஷித: |
ரோபயாமாஸ தத்தேஹம் காலிந்தீதட உத்தமே ||
--பிரம்மதர்ம புராண

சிவனின் ஆணைப்படி, சிவகணங்கள் பூமிக்கு வந்து, மிகவும் மகிழ்ச்சியுடன், உத்தமமான யமுனா நதிக்கரையில் துளஸியை நட்டனர்.

# அத்தியாயம் 3
# துளஸி பூஜையின் சிறப்பு

சுமங்கலிகள் தம்முடைய சௌமாங்கல்யத்தின் பிராப்திக்காக தினமும் விதிப்படி துளஸிபூஜை செய்ய வேண்டும். பிருந்தாவனத்தில் துளஸியை வளர்த்து, அங்கு ஸ்ரீகிருஷ்ணனின் பிரதிமையை வைத்து பூஜிக்க வேண்டும். பிருந்தாவனத்தில், பிருந்தா என்னும் அபிமானி தேவதை நிலைத்திருக்கிறாள். அந்த பிருந்தை, ஸ்ரீஹரியை விசேஷமாக வணங்கி, வரம் பெற்றிருக்கிறாள். ஆகையால், முதலில் பிருந்தாவனத்தை பூஜித்து, பிறகு ஸ்ரீஹரி சகிதமாக உள்ளே இருக்கும் துளஸியை ஷோடஷ உபசாரங்களால் பூஜிக்க வேண்டும். மிகவும் சிறிய செடியாக இருக்கையில், துளஸியை கொண்டு வந்து வைத்து பூஜிக்கக்கூடாது.

தஸ்மாத் தாம் ஸன்னிக்ருஷ்டே து ஸதா தேவீம் ப்ரபூஜயேத் |
ஸ்தோத்ரம் மந்த்ராதிகம் யத்வா ஸர்வமானந்த்யமஷ்னுதே ||

துளஸிக்கு செய்யும் ஸ்தோத்திரம், மந்திரங்கள் அதிகமான பலன்களைக் கொடுக்கின்றன. துளஸியை வீட்டில் பிருந்தாவனத்தில் வளர்த்து, ஸ்ரீஹரியை அதில் பூஜித்தால் அதிகமான பலன்கள் கிடைக்கின்றன.

ப்ரதக்ஷிணம் ஷதம் கிருத்வா நமஸ்காரஷதம் ததா |
தூபதீபாதி நைவேத்யை: ஸ்தோத்ரேண ச விசேஷத: ||
தோஷயேத் புத்ரகாமர்த்தா வத்ஸ்ராத் தனயம் லபேத் ||

--ஸூத்ர ஸம்ஹிதை

தினம்தோறும் 100 பிரதிக்ஷணை நமஸ்காரங்களை செய்து, தூப தீபாதி உபசாரங்களால், நைவேத்ய ஸ்தோத்திரங்களால் துளஸியை விசேஷமாக திருப்தி செய்தால், மக்கட் செல்வம் வேண்டுபவர்கள், அடுத்த ஓராண்டிற்குள் சிறந்த மக்களைப் பெறுவார்கள்.

வாரிசு இல்லாமல் இருந்த ஒரு பெண்ணிற்கு, கிராமத்திற்கு வெளியே இருந்த அனேக துளஸி செடிகளுக்கு தண்ணீர் இறைக்கும் செயலை செய்யுமாறு கூறினார் ஸ்ரீவிஷ்ணு தீர்த்தர். அவளும், அப்படியே செய்ய, அவளுக்கு விரைவில் புத்திர பாக்கியம் உண்டானது என்னும் விசேஷ விவரம், பஞ்சரத்ன ப்ரபா'வில் வந்திருக்கிறது.

அலமனயா நமஸ்க்ரியயா, மாத: ஞாதமபீப்ரேதம் தே, பஹிக்ராமாத் ஸரித்தடே பஹவ: துளஸீவ்ருக்ஷா:ஸந்தி | தானஸ்மின் க்ரீஷ்மகாலே ஷீதலாபிரத்பி: ஸம்யக் ஸிஞ்சய | தேன தே புத்ரோ பவிஷ்யதி || --பஞ்சரத்ன பிரபா

துளஸியை நவவித பக்தி மற்றும் ஷோடஷ உபசார பூஜைகளாலும் பூஜிக்க வேண்டும். துளஸியினால் ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்யும் தகுதி ஆண்களுக்கு மட்டுமே உள்ளது. இதனை அறிந்து பெண்கள் கவனத்துடன் இருக்க வேண்டும். சாதுர்மாதத்தில் துளஸியை விசேஷமாக பூஜித்து, தானாதிகளால் பகவந்தனை திருப்திப்படுத்த வேண்டும்.

துளஸி தோன்றிய நாள் - கார்த்திக மாத பௌர்ணமி; துளஸிக்கு திருமணம் ஆன நாள் - உத்தான த்வாதசி; ஆஷாட சுக்ல ஏகாதசியன்று, ஸ்ரீஹரி, துளஸியின் வீட்டிற்கு யோக நித்திரைக்கு செல்கிறான். அந்த நாளில், பக்தர்கள், யதிகளிடமிருந்து முத்ரா தாரணம் செய்துகொண்டு, விரத தீக்ஷையைப் பெற்று, சாதுர்மாத விரதத்தை 'நாஹம் கர்தா ஹரி: கர்தா' என்னும் சிந்தனையினால் செய்ய வேண்டும். ஸ்ரீஹரி, உத்தான த்வாதசியன்று, யோக நித்திரையிலிருந்து எழுந்து, ஸ்ரீதுளஸிக்கு மாங்கல்ய தாரணம் செய்து, தன் இருப்பிடமான வைகுண்டத்திற்கு திரும்பச் செல்கிறான் என்னும் வசனம் இருக்கிறது. ஆகையால், கார்த்திக,

மாக மற்றும் வைஷாக மாதங்களில் துளஸியினால் ஸ்ரீஹரியை விசேஷமாக பூஜிக்க வேண்டும் என்று ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆஸ்விஜ சுத்த பௌர்ணமியிலிருந்து - கார்த்திக சுத்த பௌர்ணமி வரை, கார்த்திக மாத சங்கல்பத்துடன், இந்த ஸ்தோத்திரத்தை சொல்லிக் கொண்டு ஸ்னானம் செய்ய வேண்டும். நட்சத்திரம் தெரியும்போதே எழுந்து, கார்த்திக ஸ்னானம் செய்ய வேண்டும்.

தாமோதர நமஸ்தேஸ்து ஸர்வபாப வினாஷன |
கார்த்திகஸ்ய வ்ரதம் கர்த்ரும் அனுக்ஞாம் தாதுமர்ஹஸி ||
நிர்விக்னம் குரு தேவேஷ அமாஸம் புருஷோத்தம |
இதி ஸம்ப்ரார்த்ய விதிவத் நாராயண மனாமயம் ||

**கார்த்திக மாத ஸ்னான ஸங்கல்பம்**

ஸ்ரீபாரதிரமண முக்யபிராணாந்தர்கத ஸ்ரீலட்சுமி நாராயணாத்மக ஸ்ரீ(துளஸி) ராதா ஸமேத மாஸ நியாமக கார்த்திக தாமோதர ப்ரேரணயா ஸ்ரீகார்த்திக தாமோதர ப்ரீத்யர்த்தம் துலா மாஸே கங்காதிஸார்த்த த்ரிகோடி ஸ்னானமஹம் கரிஷ்யே ||

கார்த்திகேஹம் கரிஷ்யாமி ப்ராத:ஸ்னானம் ஜனார்த்தன |
ப்ரீத்யர்த்தம் தவ தேவேஷ நிர்விக்னம் குரு கேஷவ ||
த்யாத்வாஹம் த்வாம்ச தேவேஷ ஜலே஽ஸ்மின் ஸ்னாதுமுத்யத: |
தவ ப்ரஸாதாத்வாபம் மே தாமோதர வினஷ்யது |
யோஸௌ ஸர்வகதோ விஷ்ணுஸித்ஸ்வ ரூபோ நிரஞ்சன: |
ஸ ஏவ த்ரவரூபேண கங்காம்போ நாத்ர ஸம்ஷய: |
ஸமஸ்த ஜகதாதார ஷங்க சக்ர கதாதர |
தேவ தேஹி மமானுக்ஞாம் யஷ்ருதீர்த்த நிஷேவணே ||
கங்கே ச யமுனேசைவ கோதாவரி சரஸ்வதி |
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸன்னிதிம் குரு ||

அர்க்ய மந்திர

நம: கமலனாபாய நமஸ்தே ஜலஜாயினே |
நமஸ்தேஸ்து ஹ்ருஷிகேஷ க்ருஹணார்க்யம் நமோஸ்துதே ||

ஏஹி ஸூர்ய சஹஸ்ராம்ஷோ தேஜோராஷே ஜகத்பதே |
அனுகம்பயமாம் பக்த்யா க்ருஹணார்க்யம் நமோஸ்துதே ||
பிரம்மகமண்டல ஸம்பூதே பூர்ணசந்திர நிபானனே |
த்ரைலோக்ய வந்திதே கங்கே க்ருஹாணார்க்யம் நமோஸ்துதே ||
நித்யே நைமித்திகே கிருஷ்ண கார்த்திகே பானனாஷனே |
க்ருஹணார்க்யம் மயா தத்தாம் (துலஸ்யா) ராதயா ஸஹிதோ ஹரே ||
வ்ரதின: கார்த்திகே மாஸிஸ்னாதஸ்ய விதிவன் மம |
க்ருஹணார்க்யம் மயாதத்தம் (துலஸ்யா) ராதய
ஸஹிதோ ஹரி தனுஜேந்திர விஷூதன ||

(துலா) காவேரி அர்க்ய மந்திர:

நம: கராளவதனே ஸமஸ்த கலினாஷினி |
சமஸ்தே தேவி காவேரீ க்ருஹணார்க்யம் நமோஸ்துதே |
ஸஹ்யாசல ஸமுத்பூதே ஸ்ரீரங்கோத்ஸங்க காமினி
காவேரீதிச விக்யாதே க்ருஹணார்க்யம் நமோஸ்துதே |

ஸ்னானாங்க தீர்த்த தாரணம்

ஸ்னாத்வா பாதோதகம் விஷ்ணோ: பிபன் ஷிரஸி தாரயன் |
ஸர்வபாப வினிர்முக்தோ வைஷ்ணவீம் ஸித்திமாப்னுயாத் ||

ஸமர்ப்பணம்

யஸ்யஸ்ம்ருத்யாச அனேன கங்கா பாகீரத்யாதி ஸார்த்த த்ரிகோடி தீர்த்தாபிமானி தேவதா ஸன்னிஹிதே அஸ்மின் ஜலாஷயே காவேரி நத்யாம் புண்ய நதீ புண்ய தீர்த்த (துலா காவேரி) பஸ்சிம ரங்கநாத முக்யபிராண ஸன்னிதௌ கங்காஸ்னானேன பகவான் ஸ்ரீபாரதிரமண முக்யபிராணாந்தர்கத ஸ்ரீலட்சுமி நாரயணாத்மக ஏதன் மாஸ நியாமக கார்த்திக தாமோதர ப்ரியதாம் ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து || மத்வேஷார்ப்பணமஸ்து ||

என்று சங்கல்பம் செய்து சிந்திக்க வேண்டும்.

கார்த்திக தீபம் ஏற்றுதல் (நட்சத்திர தீபம்)

தாமோதராய விஷ்வாய விஷ்வரூபதராய ச |
நமஸ்க்ருத்வா ப்ரதாஸ்யாமி வ்யோம்னிதீபம் ஹரிப்ரியம் ||
கோவிந்த தாமோதர வாஸுதேவ பிரம்மாதி ஜீவஸ்ய நிதானமூர்த்தி |

ஆகாஷவத்ஸர்வக தாவ்யயாத்மன்
(ஷாந்தாபவந்த்வாஸு ஸமஸ்த தோஷா:)
நிவாரய ஸ்ரீஷ ஸமஸ்த தோஷான் |
நிர்விக்னம் குரு தேவேஷ யாவன்மாசம் ஸமாப்யதே |
வ்ரதே நானேன தேவேஷ த்வயி பக்தி: ப்ரவர்த்தது ||

இதி ஸ்ரீஸ்காந்த புராணே கார்த்திக மாஸ மஹாத்ம்யே ஆகாஷதீப வர்ணனம நாம அஷ்டமோத்யாய: ||

ஸ்காந்த புராணத்தில், கார்த்திக மாஸ மகாத்ம்யத்தில், எட்டாம் அத்தியாயத்தில் வரும் இந்த ஸ்தோத்திரத்தை காலையில் படித்து, 33 தீபங்களை துளஸியின் முன் ஏற்ற வேண்டும். தாமோதர ஸ்தோத்திரத்தை படிக்க வேண்டும். பிறகு ஷோடஷ உபசாரங்களால் துளஸியை பூஜிக்க வேண்டும். இந்த மாதத்தில், தாமோதரன் ஸ்ரீகிருஷ்ணன், துளஸியின் வீட்டிலேயே இருக்கிறான். ஆகையால், பக்தி பாவத்தினால் அவனை அர்ச்சித்தால் துளஸியும் மகிழ்கிறாள். இங்கு ராதா என்று துளஸியை அழைக்கிறார். ராதா சமேத கார்த்திக தாமோதர ப்ரீயதாம் என வேண்டும். இவ்வாறு தினமும் ஸ்ரீதுளஸியின் சேவையினால், முற்பிறவிகளின் பாவங்கள் பரிகாரம் ஆகின்றன.

நமோ நமோ ஜகத்தாத்ரை ஜகதாத்யை நமோ நம: |
நமோ நமோ ஜகத்பூத்யை நமஸ்தே பரமேஷ்வரி ||

உலகில் இருக்கும் மக்களை தரிப்பவள் நீ. உலகில் ஆத்யளாக பூஜை செய்து கொள்பவள். உலகின் மக்களுக்கு செல்வங்களை அருள்வதற்காக நீ இருக்கிறாய். பரமாத்மனிடமிருந்து செல்வங்களைப் பெறுபவள் நீ. உனக்கு திரும்பத் திரும்ப நமஸ்காரங்களை செய்கிறேன்.

பிரஸாதம் மம தேவேஷி க்ருபயா பரயா ஸதா |

அபீஷ்ட பல ஸித்யர்த்தம் குரு மே மாதவப்ரியே ||

பிரார்த்தனாம் சமர்ப்பயாமி - என வேண்டும். மா = ரம. அவளுக்கு தவ - நாத = பரமாத்மன். மாதவனுக்கு பரம ப்ரியள் நீ ஆகிறாய். தேவதைகளுக்கு தாய் நீ. உன்னை வணங்குகிறேன். கருணையைக் காட்டி அருள்வாயாக. இப்படியாக மூன்று காலங்களிலும் துளஸியை பூஜிக்க வேண்டும். பழம், அபூப ஆகியவற்றை நைவேத்யம் செய்ய வேண்டும். வாயு புராணத்தில், துளஸி பூஜை விதானத்தை சுருக்கமாக சொல்லியிருக்கின்றனர்.

பரமாத்மனின் பூஜை ஷோடஷ உபசாரமானது. துளஸி இல்லாத பூஜையை அவன் ஏற்பதில்லை என்கிறார் புரந்தரதாசர். துளஸி இலையில் இருக்கும் பகவந்தனின் ரூபங்களும், ஞானிகளுக்கு தெரிகின்றன என்னும் விஷயம் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அப்போதே பறிக்கப்பட்ட துளஸி மற்றும் நிர்மால்யமானது என்றும்கூட ஞானிகளுக்கு தெரிகிறது.

ஒரு முறை ஸ்ரீவியாசராஜர், தம் ப்ரிய சிஷ்யர்களான புரந்தரதாசர் மற்றும் கனகதாசர்கள் அருகில் இருக்கையில், ஸ்ரீகிருஷ்ணனின் பூஜையில் ஈடுபட்டிருக்கிறார். அப்போது அங்கு கொண்டு வந்து வைக்கப்பட்ட துளஸி அனைத்தும் நிர்மால்யமானவை என்று தெரிய வருகிறது. அப்போது, ஸ்ரீசுரேந்திர தீர்த்தர் துளஸி வனத்தில் அமர்ந்து, ஆன்ஹிகங்களை செய்து, அங்கிருந்த அனைத்து துளஸிகளையும் ஸ்வாமிக்கு மானசிகமாக அர்ப்பணம் செய்திருக்கிறார் என்னும் விஷயம் அவருக்கு தெரிய வருகிறது.

ஞானிகளின் அனுசந்தானம் எப்படி இருந்தது என்பதை இதிலிருந்து அறியலாம். பதார்த்தங்களில் இருக்கும் பகவத் ரூபங்களைக் கண்ணாரக் கண்டு அவற்றை தம் பிம்ப மூர்த்திக்கு அர்ப்பணம் செய்கின்றனர்.

சாந்த்ராயணாயுதம் யஸ்து குருதேகாய ஷோதனம் |
துளஸி ஸேவனாதேவ ஹேரம்போ விஜதேந்திரிய: ||
தாரகம் ஸமரே ஹத்வா தேவஸேனாதி போ஽பவத் ||
-- கருட புராணம்

10,000 சாந்திராயண விரதங்களை செய்தால் தேகத்திற்குக் கிடைக்கும் பவித்ரம், துளஸி பூஜையாலேயே கிடைக்கிறது. இப்படி துளஸி பூஜை செய்ததாலேயே, ஷண்முகன், போரில் தாரகாசுரனைக் கொன்று, தேவதைகளின் சேனாதிபதி ஆகமுடிந்தது.

தாத்ரி ஹவன

கார்த்திக மாத கடைசி நாட்களில் / கார்த்திக சுத்த த்வாதசியன்று, தாத்ரி ஹவன செய்யும் சம்பிரதாயம் இருக்கிறது. சாதுர்மாத விரதத்தில், அந்த நான்கு மாதங்களில், ஸ்ரீஹரி உபாசனையில் ஏதேனும் பங்கம் வந்திருந்தால், அதனை தாத்ரி மற்றும் துளஸி விவாகாதிகளால் பரிகரித்துக் கொள்ளும் வழியை ஞானிகள் சொல்லியிருக்கின்றனர்.

தாத்ரி வ்ருக்ஷத்தின் மகிமை இவ்வாறு உள்ளது. ஒரு முறை, ஸ்ரீமன் நாராயணனின் தரிசனத்தால், பிரம்மதேவருக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாகி, ஆனந்தக்கண்ணீர் வந்தது. அது நிலத்தின் மேல் விழுந்தது. அப்போது அதிலிருந்து தோன்றிய வ்ருக்ஷமே - தாத்ரி வ்ருக்ஷம். இது வைஷ்ணவ வ்ருக்ஷம். இந்த மரத்தின் இலைகள், ஸ்வாமியின் அர்ச்சனைக்கு தக்கதாக இருக்கின்றன.

இவ்வாறு, இந்த தாத்ரி மரம், விஷ்ணுவின் ப்ரியமாக இருக்கிறது. இது ஸ்கந்த புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கார்த்திக மாதத்தில் துளஸி வனத்தின் நடுவில் தாத்ரியின் அடியில், ஸ்ரீஹரி பூஜையை செய்ய வேண்டும்.

தாத்ரி பல விமிஸ்ரைஸ்ச துளஸி பத்ர மிஸ்ரிதை: |
ஜலை: ஸ்னாதி நரஸ்தஸ்ய கங்காஸ்னான பலம் ஸ்ம்ருதம் ||
ஸ்காந்த புராணம்

இது ஸ்கந்த புராணத்தின் வசனம். தாத்ரி பழங்கள் கலந்த மற்றும் துளஸி பத்ரங்களால் கலந்த தண்ணீரினால் ஸ்னானம் செய்யும் நரனுக்கு, கங்கா ஸ்னானத்தின் பலன் கிடைக்கிறது என்று ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டுள்ளது.

தாத்ரி பலம் ச துளஸி ம்ருத்திகா த்வாரகோத்தவா |

ஸபலம் ஜீவிதம் தஸ்ய த்ரிதயம் யஸ்ய வேஷ்மனி ||
ஸ்காந்த புராணம்

தாத்ரி பழம், துளஸி மற்றும் த்வாரகையின் மிருத்திகை - இந்த மூன்றும் யாருடைய வீட்டில் இருக்கிறதோ அவனின் வாழ்க்கை சார்த்தகம் ஆகிறது.

இந்த மூன்றையும் யார் தங்களுடைய தேகத்தில் தரிக்கின்றனரோ, அவர் ஜீவன் முக்தர் எனப்படுகிறார். கார்த்திக மாதத்தின் நியமத்தைப் போல, யார் ஸ்ரீஹரியை, துளஸி இதழ்களால் பூஜிக்கிறாரோ, அவர் ஸம்சாரத்திலிருந்து முக்தர் ஆகின்றனர். விப்ரருக்கு மற்றும் ஸௌபாக்யவதிகளுக்கு இந்த மாதத்தில் தீப தானாதிகளைக் கொடுக்க வேண்டும். துளஸி ஸமேத தீபதானம், அந்த ஆண்டின் அனைத்து கர்மங்களையும் ஸ்ரீஹரிக்கு சமர்ப்பிக்கும் விசேஷமான காலம் ஆகும்.

துளஸி மிருத்திகாதாரணி கலி நிவாரக
துளஸி ம்ருத்திகாலிப்தம் லலாடம் யஸ்ய த்ருஷ்யதே
குலோ ஸ்ப்ருஷதி நோ தஸ்ய கலிர்முனி வரோத்தம ||
பத்ம புராணம்

யாருடைய நெற்றியில், துளஸி மிருத்திகை இருக்கிறதோ, அவருடைய குலத்தை கலி தொடுவதில்லை. காலையில் ஸ்னானம் செய்வதற்கு முன்னர், துளஸி மிருத்திகையை நெற்றியில் வைத்துக் கொள்ள வேண்டும். இதனை தொடர்ந்து செய்து வருபவர்களின் வீட்டில் கலி நுழைவதில்லை. பசுக்களை வணங்குவது, ஞானிகளை வணங்குவது ஆகியவை, தேவதைகளை வணங்கியதைப் போல ஆகும். துளஸி இருக்கும் இடத்தில் தேவதைகள் இருக்கின்றனர் என்பதை விளக்கும் ஸ்லோகம் இது.

துளஸி கானனம் யத்ர யத்ர பத்மவனானிச |
வஸந்தி வைஷ்ணவா யத்ர தத்ர ஸன்னிஹிதோ ஹரி: ||
பத்ம புராணம்

எங்கு துளஸி வனம் இருக்கிறதோ, எங்கு பத்ம வனம் இருக்கிறதோ, வைஷ்ணவர்கள் இருக்கின்றனரோ, அங்கு

பாவங்களை களையக்கூடிய பரமாத்மன் இருக்கிறான் என்பது இதன் அர்த்தம். ஆகையால், துளஸிச் செடி வீட்டில் கட்டாயம் இருக்க வேண்டும்.

புஷ்கராத்யானி தீர்த்தானி கங்காத்யா: ஸரிதஸ்ததா |
வாஸுதேவாதயோ தேவா வஸந்தி துளஸீவனே ||
பத்ம புராணம்

புஷ்கர முதலான தீர்த்தங்கள், கங்காதி நதிகள், வாசுதேவாதி தேவதைகள், துளஸிச் செடியில் இருக்கின்றனர். ஆகவே, துளஸிச் செடியை வீட்டில் வளர்த்து, அதன் சன்னிதியில் செய்த தேவபூஜை, ஜபம், யாக யக்ஞ, பித்ரு காரியங்கள் முதலான கர்மங்கள் தக்க பலன்களைக் கொடுக்கின்றன. துளஸிக்கு செய்யும் பூஜை, உபசாரங்கள் அனைத்தும், தேவதைகளுக்கு மற்றும் பரமாத்மனுக்கு செய்ததாகவே ஆகிறது. யதிகளின் பிருந்தாவனத்தில் இருக்கும் மிருத்திகைக்கு அபாரமான மஹிமாசக்தி இருக்கிறது என்பதை பொதுவாக அனைவரும் அறிவோம்.

இதைப்போலவே, துளஸியின் மிருத்திகைக்கும் மிகவும் அபாரமான மகிமை இருக்கும் விஷயம் புராணங்களிலும், வேறு கிரந்தங்களிலும் ஞானிகளால் சொல்லப்பட்டுள்ளன. அனைத்து விரத, பண்டிகைகளையும், துளஸியின் மகிமைகளை அறிந்து செய்தால், அப்போதே அதன் தக்க பலன்கள் கிடைக்கின்றன. ஸ்னானத்திற்கு தேவையான பொருள் என்றால் அது துளஸி மிருத்திகையே. இதனை உடம்பில் தேய்த்துக்கொண்டு, ஸ்னானம் செய்தால், அஷ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கிறது என்று புராணங்கள் சொல்கின்றன. அர்த்தோதய முதலான பர்வ காலங்களில் துளஸி மிருத்திகையின் ஸ்னானம் மிகவும் பவித்ரமானது என்று சொல்லப்பட்டுள்ளது.

தன்மூலம்ருத்திகாம் சாங்கே க்ருத்வா ஸ்னாதி தினே தினே |
தஷாஷ்வமேத அவப்ருதச்னானஜம் லபதே பலம் ||
அர்த்தோதயே மாகமாஸே ஸ்னாயாத் தன்மூல பாம்ஸுபி:
குலத்ரயம் ஸமுதார்ய விஷ்ணுலோகே மஹீயதே ||

மாக மாதத்தில், அர்த்தோதய யோகம் வந்தால், அப்போது துளஸி மிருத்திகையினால் ஸ்னானம் செய்ய வேண்டும். இதனால் மூன்று குலத்தின் உத்தாரம் ஆகிறது. அவன் திரும்பத்திரும்ப வைஷ்ணவனாக பிறந்து, சாதனையை செய்கிறான். கடைசியில், விஷ்ணு லோகத்தில் சுகத்துடன் இருக்கிறான்.

புஷ்ய அல்லது மாக மாத அமாவாசை, ஞாயிறு, சிரவண நட்சத்திரம், வியதீபாத யோக இவை அனைத்தும் ஒன்று சேர்ந்தால், அது அர்த்தோதய பர்வகாலம் எனப்படுகிறது.

***

# அத்தியாயம் 4
# நம் பாரதிய தர்மம்

அனைத்து ஜீவர்களுக்கும், மூன்று வித தாபங்களும் கட்டாயம் வருகின்றன. இந்த தாபங்களின் பரிகாரத்திற்கு, ஶ்ரீஹரியை சரணடைவது ஒன்றே வழியாகும். நீயே ஈசன். நான் உன் தாசன். சம்சாரத்தில் ஈடுபாடு, விஷய பொருட்களில் ஆசை, வைராக்கியம் இல்லாதது ஆகியவையே துக்கத்திற்கு காரணம். அபிமானத்தை விடுவதே துக்கத்தின் நிவாரணையின் சாதனம். உதாரணம்: ஜடபரதன், அஜாமிளன் ஆகியோர். திடபக்தியினாலேயே விஷ்ணு பிரசாதம் சாத்தியம். வெறும் விஷ்ணு ப்ரீத்யர்த்தமாக கர்மங்களை செய்வதே சாதன மார்க்கமாகும். நித்ய நைமித்திக கர்மங்களை விடாமல் செய்ய வேண்டும். காம்ய கர்மங்களை விட வேண்டும்.

நம் பாரதிய சனாதன தர்மம் மிகச் சிறந்தது. புராண இதிகாசங்களில் சொல்லப்பட்டவாறு, விஷ்ணு தன் பரிவார தேவதைகளுடன் இந்த பூமியில் அவதரித்து, தர்ம மார்க்கத்தை மக்களுக்கு போதித்திருக்கிறான். தானே கடமைகளை செய்து காட்டியிருக்கிறான். ரமாதேவியும்கூட பகவந்தனின் ஆணையை ஏற்று நடந்திருக்கிறார். மனிதர்களுக்கு மட்டும் அல்லாமல், பசு, பிராணி, கிருமி பூச்சிகளையும்கூட மரியாதை கொடுக்கும் சம்பிரதாயம் நம் தர்மத்தில் வந்திருக்கிறது. இது அஞ்ஞானத்தில் செய்வது அல்ல. இதன் பின்னணியை சரியாக அறிவதற்கு

ஞானிகள் வாக்குகள் மற்றும் புராண இதிகாசங்களின் அறிவு தேவை.

உடுப்பியில் ஒரு நாளுக்கு லட்ச துளஸி தள அர்ச்சனையை, பர்யாய பலிமாரு மடத்து ஸ்வாமிகள் துவக்கியிருந்தார். ஒரு தள துளஸி அர்ச்சனைக்கே, ஸ்ரீஹரி மகிழ்கிறான் என்றால்; ஒரு நாளைக்கு லட்ச துளஸி தளங்களை வளர்த்து, விதிப்படி அதனை பறித்து, ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ப்பித்துக் கொண்டிருந்தார். இதன் பலன், அந்த பிரதேசத்தின் மேல் எவ்வளவு இருக்கும் என்று ஊகிக்கவும் முடியாது. அப்படி அர்ச்சிக்கப்பட்ட துளஸியின் ஒவ்வொரு நிர்மால்யமும், வீண் ஆகாதவாறு அவற்றை ஆயுர்வேதத்தின் மருந்து மூலிகைகளில் சேர்க்குமாறும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பலாஷம் தினமேகம் ச பங்கஜம் ச தினத்ரயம் |
பஞ்சாஹம் பில்பபத்ரம் ச தஷ்யாஹம் துளஸிதளம் ||
ஸ்காந்த புராணம்

ஒரு நாள் பலாஷ (புரசு); மூன்று நாட்கள் தாமரை; ஐந்து நாட்கள் வில்வம்; 10 நாட்கள் துளஸி. இவ்வளவு நாட்கள் வரை அவை நிர்மால்யம் எனப்படுவது இல்லை.

***

# அத்தியாயம் 5
# துளஸி காஷ்ட சந்தனம்

யோ ததாதி ஹரேர் நித்யம் துளஸி காஷ்ட சந்தனம் |
யுகானி வஸதி ஸ்வர்க்கே அனந்தானி நரோத்தம: ||

யாரொருவன் தினமும் ஸ்ரீஹரிக்கு துளஸி காஷ்டத்தின் சந்தனத்தை சமர்ப்பிக்கிறானோ, அவன் அனந்த யுகங்களின் வரை, ஸ்வர்க்கத்தில் நிலைத்திருக்கிறான்.

துளஸி காஷ்டத்தினால் சந்தனத்தை எடுத்து, தினமும் பரமாத்மனுக்கு அந்த சந்தனத்தை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு சிரத்தையுடன் செய்பவன், முக்தியை அடைகிறான். அவன் திரும்ப

சம்சாரத்திற்கு வருவதில்லை. இவ்வாறு துளஸி காஷ்டத்தின் சந்தனத்தை ஸ்வாமிக்கு சமர்ப்பித்து, பிறகு தன் அங்கங்களில் பக்தியுடன் தரிக்க வேண்டும். இந்த சந்தனத்தை தேவதைகள் மற்றும் பித்ருகள் விரும்புகின்றனர். ஆகையால் நித்ய பூஜையில் தேவதைகளுக்கு மற்றும் சிரார்த்தத்தில் பித்ருகளுக்கு துளஸி சந்தனத்தை சமர்ப்பிக்கிறோம்.

தினமும் 18 தளங்களை தவறாமல் ஏற்றுக் கொள்ளவேண்டும். இரு காதுகளில் 4 தளங்களையும்; முகத்தில் ஒன்று; நாபியில் ஒன்று; தலையில் ஒன்று; தீர்த்தத்தில் மூன்று; அன்னத்தின் மேல் ஐந்து (பிராணாஹுதியின் சந்தர்ப்பத்தில்). உணவு உண்டபிறகு மூன்று தளங்கள். இவ்வாறு மொத்தம் 18 தளங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சது:கர்ணே முகே சைகம் நாபாவேகந்ததைவ ச |
ஷிரஸ்யேகம் ததா ப்ரோக்தம் தீர்த்தே த்ரீணி ததா க்ரமாத் |
அன்னோபரி ததா பஞ்ச போஜனாந்தே தலத்ரயம்
ஏவம் ஸ்ரீதுளசீ தார்யா அஷ்டாதஷ மனீஷிபி: ||
துளஸீமிஸ்ரிதம் சான்னம் யோ தத்யாத் ப்ராணபஞ்சகே |
ஸிக்தே ஸிக்தே பவேத்தஸ்ய புண்யம் யக்ஞஷதாதிகம் ||

பிராணபஞ்சக ஆபோஷனத்தில் துளஸியை பயன்படுத்துவது மிகவும் புண்யகரமாகும். ஒவ்வொரு கைப்பிடிக்கும் நூறு யக்ஞங்கள் செய்த புண்ணியம் வருகிறது. மொத்தம் ஐந்து பிராணாஹுதிகளுக்கு ஐந்து தளசி தளங்களையும் பயன்படுத்தினால் ஐநூறு யக்ஞங்களை செய்த அளவிற்கு புண்ணியம் கிடைக்கிறது. ஆகையால், பிராணாஹுதியில் துளஸியை ஏற்றுக் கொள்ள மறக்கக்கூடாது.

துளஸிமிஸ்ரிதம் தோயமேகாதஷ்யாம் கதாசன |
ந க்ராஹ்யம் விஷ்ணுபக்த்யைஸ்து வ்ரதம் நஷ்யேச்ச பார்வதி ||
ஸ்கந்த புராண

வைஷ்ணவர்கள் யாரும் ஏகாதசியன்று துளஸி சேர்ந்த தீர்த்தத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது. தெரியாமல் எடுத்துக் கொண்டாலும்

ஏகாதசி நஷ்டம் ஆகிறது. விலக்கப்பட்ட நாட்களில், கீழே உதிர்ந்த துளஸி தளங்களால் பூஜை செய்யலாம்.

நிஷித்தே திவஸே ப்ராப்தே க்ருண்ஹியாத் கலிதம் தலம் |
தேனைவ பூஜாம் குர்வீத ந பூஜா துளஸீம் வினா ||

துளஸி கிடைக்காத நாட்களில், கிழே உதிர்ந்த துளஸியை எடுத்து, அதனால் ஸ்ரீஹரியை பூஜிக்கலாம். துளஸி இல்லாமல் ஸ்ரீஹரி பூஜையை செய்யக்கூடாது. துளஸி இல்லாத புஷ்பார்ச்சனை சரியல்ல.

அன்யேஷாம் புஷ்பராஷீணாம் சஹஸ்ரம் விபலம் பவேத் |
அவஜீய ஸ்வயம் குர்யாத் லக்ஷபுஷ்பாதி கம்புத: ||
ஸ ஏவ பூர்ணம் லபதே பலம் துளஸி பூஜனாத் ||
-- ஸ்காந்த புராண

துளஸி இல்லாமல் ஏகப்பட்ட புஷ்பங்களால் செய்த சஹஸ்ர புஷ்பார்ச்சனையும்கூட வீணே. நாமே பறித்துக் கொண்டு வந்த புஷ்பங்கள் சிறந்தவை. துளஸியை தண்ணீர் தெளித்து பயன்படுத்தக்கூடாது. துளஸியை பார்த்து யாரொருவன் கை குவித்து வணங்காமல் செல்கிறானோ, அவன் மிகவும் பாவி ஆகிறான்.

யா த்ருஷ்டா நிகிலாக ஸங்கஷமனி ஸ்ருஷ்டாவம: பாவனி |
ரோகாணாமபிவந்திதா நிரஸனி ஸிக்தாந்தகத்ராஸினி |
ப்ரத்யாஸத்திவிதாயினி பகவத: க்ருஷ்ணஸ்ய ஸம்ரோபிதா
ந்யஸ்தா தச்சரணே விமுக்திபலதா தஸ்யை துலஸ்யை நம: ||

தரிசனத்தால் அனைத்து பாவங்களையும் பரிகரிக்கும்; ஸ்பரிசத்தால் தேகத்தை பவித்ரமாக்கும்; வந்தனையால் நோயகளை பரிகரிக்கும்; ப்ரோக்ஷணையால் யம பயத்தை பரிகரிக்கும்; வளர்ப்பதால் பகவந்தனான ஸ்ரீகிருஷ்ணனில் பக்தியை அருளும்; ஸ்ரீஹரியின் பாத கமலங்களில் சமர்ப்பிப்பதால் முக்தி பலனையும் அருளும் துளஸிக்கு என் நமஸ்காரங்கள்.

# அத்தியாயம் : 6
# துளஸி ஸ்தோத்திரம்

ஸ்ரீமகாலட்சுமி மற்றும் சரஸ்வதி தேவியரை கொண்டாடுவதைப் போல, துளஸியையும் தனியாக ஸ்தோத்திரம் செய்வது வழக்கமாக வந்திருக்கிறது. துளஸியின் ரூப குணங்களை மிகவும் சிறப்பாக கொண்டாடியிருக்கின்றனர். வேதத்தில் துளஸியின் குறிப்பு மற்றும் அவளைப் பற்றி உபநிஷத் குறிப்புகளும் இருப்பதாக ஞானிகளின் வாக்குகளிலிருந்து தெரிய வருகிறது. ஹரிதாச பரம்பரையில் ஸ்ரீபாதராஜரிலிருந்து துவங்கி 20ம் நூற்றாண்டின் ஹரிதாசர்கள் வரைக்கும் பலரும் மிக அழகாக தம் கிருதிகளில் துளஸியை யதாமதி பாடி போற்றியிருக்கிறார்கள்.

1. ஜகத்தாத்ரி நமஸ்துப்யம் விஷ்ணோச்ச ப்ரியவல்லபே |
யே ச பிரம்மதயோ தேவா: ஸ்ருஷ்டிஸ்தித்யந்த காரிண: ||
2. யதா கங்கா பவித்ராங்கி ஸுரலோகே விமோக்ஷதா |
யதா பாகீரதி புண்யா ததேயம் துலஸீ ஷிவா ||
3. புஷ்கராத்யானி தீர்த்தானி கங்காத்யா: ஸரிதஸ்ததா |
வாஸுதேவாதயோ தேவா வஸந்தி துலஸீவனே ||

துளஸி பறிக்கும்போது சொல்ல வேண்டிய மந்திரம்

1. துளஸ்யம்ருத ஜன்மாஸி ஸதாத்வம் கேஷவ ப்ரியே |
கேஷாவார்த்தம் ஜினோமி த்வாம் க்ஷமஸ்வ ஹரிவல்லபே ||
2. த்வாதஷ்யாம் ப்ராதருத்தாய ஸ்னாத்வா கர்ம ஸமாப்ய ச |
அப்யர்ச்ய விஷ்ணும் தேவேஷ முபவாஸம் ஸமர்ப்பயேத் ||
3. ஏகாதஷ்யாம் நிராஹார: ஸ்டீத்வா ஹமபரேஹனி |
போக்ஷ்யமி புண்டரீகாக்ஷ ஷரணம் பவ மேச்யுத ||
4. அஞ்ஞான திமிராந்தஸ்ய வ்ரதேனானேன கேஷவ |
ப்ரதக்ஷிணம் ஷதம் க்ருத்வா நமஸ்காரஷதம் ததா |
தூபதீபாதி நைவேத்யை: ஸ்தோத்ரேண ச விசேஷத: ||
தோஷயேத் புத்ரகாமார்த்த வத்ஸராத் தனயம் லபேத் ||

தினம்தோறும் 100 பிரதிக்ஷணை, 100 நமஸ்காரங்களை செய்து, தூப தீபாதி உபசாரங்களாலும், ஸ்தோத்திரங்களாலும் துளஸியை

விசேஷமாக திருப்திப்படுத்தினால், வாரிசு வேண்டுபவர்கள் ஒரு ஆண்டிற்குள் அந்த வாரிசினை அடைவார்கள்.

ப்ரதக்ஷிணேகுர்வதே யே த்ருஷ்ட்வா த்வாம் யத்ர குத்ரசித் ।
ப்ரணமந்தி ச யே பக்த்யா ஸதே துக்கானி யாந்தி வை ।।

துளஸியை பார்த்தால் உடனேயே பக்தியுடன் விழுந்து வணங்க வேண்டும். அப்படி செய்பவர்களின் துக்கங்கள் விலகுகின்றன.

துளஸிகானனம் த்ருஷ்ட்வா விமுலோ யாதி பாதகி ।
நிஷ்சயான் முனிஷார்தூல பிரம்மஹா ஸ நிகத்யதே ।।

என்னும் இந்த ஸ்ருதி வசனம், யார் துளஸி வனத்தை பார்த்து அதற்கு கை வணங்காமல், பிரதக்ஷிணை செய்யாமல் இருக்கிறாரோ, அவன் பிரம்மஹா எனப்படுகிறான். ஆகையால், ஸ்ரீதுளஸியைக் கண்ட உடனேயே பிரதக்ஷிணை நமஸ்காரங்களை செய்ய வேண்டும். ஒரு முறை தேவரிஷி நாரதர், துளஸி பூஜையின் விதி நிஷேதங்களை தமக்கு விளக்குமாறு மஹா ருத்ரதேவரிடம் கேட்கிறார். தேவரிஷிகளான நாரதருக்கு அந்த விஷயங்களை பூமியில் உள்ள சஜ்ஜனர்களுக்கு சொல்ல வேண்டும் என்னும் விருப்பமும் இருந்தது. இந்த கேள்விக்கு ருத்ர தேவர்:

ஷுபே பக்ஷே ஷுபே வாரே ஷுபே ரிக்ஷே ஷுபோதயே ।
கேஷவார்த்தே ஷுபாம்ஷேச ரூபயோத்துலஸீம் முனே ।
க்ருஹஸ்யாங்கண மத்யே வா க்ருஹஸ்யோபவனேபி வா ।
ஷுசௌ தேஷேச துலஸீமர்ச்சயேத் புத்திமான் நர: ।
மூலே ச வேதிகாம் குர்யாதாலவாலஸ மன்விதாம் ।।

மகாருத்ரதேவர் நாரதரிடம் இவ்வாறு கூறுகிறார். கண்ட நாட்களில் துளஸி செடியை நடக்கூடாது. அதற்கு பஞ்சாங்க ஷுத்தி அவசியம். ஷுப பக்ஷ, ஷுப வார, ஷுப நட்சத்திரத்தில், ஷுபோதயத்திலேயே துளஸியை நட வேண்டும். தேவபூஜைக்காகவே செடியை நடவேண்டும். வீட்டின் அங்கணத்தில், வீட்டின் தோட்டத்தில் அல்லது பரிசுத்தமான ஒரு இடத்தில் துளஸியை வளர்க்க வேண்டும்.

எஜமானன் தன் வீட்டில் எவ்வளவு அதிக செடியை வளர்க்கிறானோ, அந்த செடியின் வேர்கள் எவ்வளவு தூரத்திற்கு பரவுகிறதோ, அவ்வளவு தூரத்திற்கு அவனுக்கு தத்வஞானத்தின் அறிவு வளர்ந்து விஷ்ணு லோகத்திற்கு சாதனை ஆகிறது என்று ஞானிகள் கூறுகின்றனர். துளஸி செடி இருக்கும் இடத்தை சுற்றியும், 16 முழ தூரத்திற்கு மகா தீர்த்தம் எனப்படுகிறது. 4 முழ தூரத்திற்கு, பக்தியுடன், கோமய ஜலத்தினால், கழுவி விடவேண்டும்.

## அ. துளஸி கவச

ஸ்காந்த புராணோக்த துளஸி கவச

அஸ்ய ஸ்ரீ துளஸிகவச மஹாமந்த்ரஸ்ய | விஷ்ணு ரிஷி: | அனுஷ்டுப் சந்த: | ஸ்ரீதுளஸி தேவதா | அபீஷ்ட ஸித்யர்த்தே | ஜபே வினியோக: ||

துளஸி மே ஷிர: பாது பாலம் பங்கஜதாரிணே |
த்ரு ஷௌமே பத்மனயனா ஸ்ரீ ஸபீ ஷ்ரவணே மம ||1

பிராணம்ஸுகந்தா மே பாதுமுகம் ச ஸுமுகீ மம |
ஜிஹ்வாம் மே பாது ஷுபதா கண்டம் வித்யாமயீ மம ||2

ஸ்கந்தௌ கண்ஹாரிணே பாது ஷுபௌ மே பாபஹாரிணி |
கரௌ பத்மகரா பாது ஹ்ருதயம் விஷ்ணுவல்லபா ||3

மண்யதா மத்யமம் பாது நாபிம் ஸௌபாக்யதாயினி |
கடிம்குண்டலினி பாது ஊரு நாரத வந்திதா ||4

நாராயனப்ரியா பாது ஸர்வாங்கம் ஸர்வரக்ஷிதா |
ஸங்கடே விஷ்யமே துர்கே பயே வாதே மஹாஹவே ||5

நிஷ்யன்ஹி ஸந்த்யயோ: பாது துளஸி ஸர்வத: ஸதா |
இதீதம் பரமம் குஹ்யம் துளஸ்யா: கவசம் முதா ||6

துளஸி கானனே திஷ்ட ஸ்னாஸீனோ வா ஜபேதிதம் |
ஸர்வான் காமானவாப்னோதி விஷ்ணு ஸாயுஜ்ய ம்ருச்சதி ||7

இதி ஸ்ரீ துளஸி கவச ஸ்தோத்திரம் ஸம்பூர்ணம் ||

## ஆ. துளஸி பூஜா விதானம் - சுருக்கமாக

(ஆண் பெண்கள் இருவரும் தினமும் செய்ய வேண்டியது)

ஆசமன, பிராணாயாம மற்றும் சங்கல்பங்களை செய்து சங்கல்பத்தின் இறுதியில் துளஸ்யந்தர்கத பாரதிரமண முக்ய பிராணாந்தர்கத ஸ்ரீகோபால கிருஷ்ண பூஜாம் கரிஷ்யே என்று கையில் பூ பிடித்து துளஸி செடியில் இருக்கும் ஸ்ரீதுளஸியின் தியானம் செய்ய வேண்டும்.

த்யாயாமி துளஸீ தேவீம் ஷ்யாமாம் கமலலோசனாம் ।
பிரஸன்னாம் பத்ம கல்ஹார வராபய சதுர்புஜாம் ।
கிரீட ஹார கேயூர குண்டலாதி விபூஷிதாம் ।
தவலாம்ஷுக ஸம்யுக்தாம் பத்மாஸன நிஷேதுஷீம் ।।

ஷ்யாமள வர்ணளான, தாமரைக் கண்களைக் கொண்டவளான, புன்னகை முகத்தைக் கொண்ட, நான்கு கைகளைக் கொண்ட, அவற்றில் சிவப்பு தாமரை, வெள்ளைத் தாமரை, வரத்தைக் கொடுக்கும் முத்திரை, அபய முத்திரை ஆகியவற்றை தாங்கியிருக்கிறாள். கிரீட, ஹார, கேயூர மற்றும் குண்டலங்களால் ஒளிர்கிறாள். வெள்ளைப் பட்டுத் துணியை உடுத்தி, பத்மாசனத்தில் அமர்ந்த ஸ்ரீதுளஸி மூர்த்தியை தியானம் செய்து இத்தகைய மூர்த்தி, எதிரில் இருக்கும் துளஸி செடியில் நிலைக்கட்டும் என்று ஆவாஹனம் செய்ய வேண்டும். (அந்தர்யாமி ஸ்ரீகிருஷ்ணாய நம:).

1. துளஸ்யை நம: । பகவத்யை நம: । விஷ்ணுவல்லபாயை நம: । த்யாயாமி ஆவாஹயாமி ஆஸனம் சமர்ப்பயாமி. (மந்திராட்சதை தூவவும்).

2. ஸர்வதேவமயாயை நம: பாத்யம் சமர்ப்பயாமி
(செடியின் கீழ், உத்தரிணியால் தண்ணீர் ஊற்றவும்).

3. ஸர்வதீர்த்த மயாயை நம: அர்க்யம் சமர்ப்பயாமி
(செடியின் கீழ், உத்தரிணியால் தண்ணீர் ஊற்றவும்).

4. தைத்யாந்த க்ருத்ப்ரியாயை நம: ஆசமனீயம் சமர்ப்பயாமி
(செடியின் கீழ், உத்தரிணியால் தண்ணீர் ஊற்றவும்).

5. சர்வலோகஹிராயை நம: ஸ்னானம் சமர்ப்பயாமி
(செடியின் கீழ், உத்தரிணியால் தண்ணீர் ஊற்றவும்).

6. லட்சுமி ஸஹோதர்யை நம: வஸ்திரம் சமர்ப்பயாமி
கஜவஸ்திரம் சமர்ப்பிக்கவும்

7. மஹாதேவ்யை நம: கந்தம் சமர்ப்பயாமி
சந்தனம் சமர்ப்பிக்கவும்

8. ரமாவாஸாயை நம: புஷ்பான் சமர்ப்பயாமி
பூக்களை சமர்ப்பிக்கவும்

9. அபீஷ்டதாயை நம: தூபம் சமர்ப்பயாமி
தூபம் காட்டவும்

10. பாபஹாரிண்யை நம: தீபம் தர்ஷயாமி
ஏகாரத்தி காட்டவும்

11. பகவத்யை நம: நைவேத்யம் சமர்ப்பயாமி
சமையல் பதார்த்தங்கள் அல்லது பழம், சக்கரை, வெல்லம், பால் ஆகியவற்றை சமர்ப்பிக்கவும்.

12. அமிர்த சம்பூதாயை நம: தாம்பூலம் சமர்ப்பயாமி

13. அம்ருதரூபிண்யை நம: தக்ஷிணாம் சமர்ப்பயாமி

14. ஜகத்தாத்ர்யை நம: நீராஜனம் சமர்ப்பயாமி
(ஆரத்தி காட்டவும்)

15. ஸதக்ஷிணாயை நம: ப்ரதக்ஷிணம் சமர்ப்பயாமி

16. பரமைஷ்வர்யை நம: நமஸ்காரான் சமர்ப்பயாமி

17. அபீஷ்டதாயை நம: பிரார்த்தனாம் சமர்ப்பயாமி.

பிரார்த்தனா ஸ்லோகம்:
துளஸி ஸ்ரீ ஸகி ஷுபே பாபஹாரிணி புண்யதே |
நமஸ்தே நாரதனுதெ நாராயண மன: ப்ரியே ||

ஸ்ரீதுளஸ்யை நம: ப்ரஸன்னார்க்யம் சமர்ப்பயாமி

மந்த்ர: ஸ்ரீய: ப்ரியே ஸ்ரீயாவாஸே நித்யம் ஸ்ரீதரவல்லபே |
பக்த்யா தத்தம் மயார்க்யம் ஹி துளஸி ப்ரதிக்ருஹ்யதாம் ||

அனேன ப்ராதர: பூஜனேன ஸ்ரீ துளஸ்யந்தர்கத பாரதிரமண முக்யபிராணாந்தர்கத ஸ்ரீலட்சுமி நாராயண ப்ரீயதாம் ப்ரீதோ பவது ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

(மந்திராட்சதை நீரினை அர்க்ய பாத்திரத்தில் விடவும்)

இதி துளஸி பூஜா விதி: விஷ்ணு தர்மோத்தர புராண.

***

# அத்தியாயம் 07
# ஷோடஷோபசாரங்களால் துளஸி பூஜை

த்யாயேச்ச துளஸீம் தேவீம் ஷுபாம் கமலலோசனாம் |
பிரஸன்னாம் பத்மகல்ஹார வராபய சதுர்புஜாம் ||
கிரீடஹார கேயூர குண்டலாதி விபூஷிதாம் |
தவலாம்ஷுக ஸம்யுக்தாம் பத்மாஸன நிஷேதுஷீம் ||
த்யானம் சமர்ப்பயாமி

தாமரை போன்ற கண்களைக் கொண்ட பரம மங்கள ஸ்வரூபிணியான ஸ்ரீதுளஸி பத்ம கல்ஹாரங்களை இரு கைகளிலும் ஏந்தியிருக்கிறாள். வர அபய முத்திரைகளை இன்னொரு இரு கைகளில் தரித்திருக்கிறாள். வெண்மையான வஸ்திரங்களால் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கிறாள். இத்தகைய ஸ்ரீதுளஸி தேவியின் தியானத்தை செய்கிறேன் என்று சிந்தித்தவாறு தியானம் செய்ய வேண்டும்.

1. தேவி த்ரைலோக்யஜனனி ஸர்வலோகைக பாவனி
ஆகச்ச பகவத்ப்ரீதே ப்ரஸீத துளஸி ப்ரியே ||
ஆவாஹனம் சமர்ப்பயாமி ||

மூன்று உலகங்களின் தாயே, இந்த துளஸிச் செடியில் நிலைகொள்வாயாக. என்னை அருள்வாயாக. ஆவாஹனத்தை சமர்ப்பிக்கிறேன்.

2. ஸர்வலோகமயே தேவி ஸர்வதா விஷ்ணுவல்லபே |
தேவி ஸ்வர்ணமயம் திவ்யம் க்ருஹாணாஸனமவ்யயே ||
ஆஸனம் சமர்ப்பயாமி

3. ஸர்வதேவமயாகாரே ஸர்வதேவ நமஸ்க்ருதே
தத்தம் பாத்யம் க்ருஹாணேதம் துளஸி த்வம் ப்ரஸீத மே ||
பாத்யம் சமர்ப்பயாமி

4. ஸர்வதீர்த்த மயாகாரே ஸர்வாக நிஷேவிதே |
இதமர்க்யம் க்ருஹாணத்வம் தேவி தைத்யாங்க ப்ரீயே |
அர்க்யம் சமர்ப்பயாமி

5. ஸர்வலோகஸ்ய ரக்ஷார்த்தம் ஸதாஸன்னிதி காரிணி |
க்ருஹாண துலஸி ப்ரீத்யா இதமாசமனீயகம் ||
ஆசமனம் சமர்ப்பயாமி

6. கங்காதிப்யோ நதீப்யஷ்ச ஸமானீதமிதம் ஜலம் |
ஸ்னானார்த்தம் துலஸி ஸ்வச்சம் ப்ரீத்யர்த்தம் ப்ரதிக்ருஹதாம் ||
ஸ்னானம் சமர்ப்பயாமி

7. க்ஷீரோதமதனோத்பூதே சந்த்ரலக்ஷ்மீ ஸஹோதரி |
க்ருஹ்யதாம் பரிதானார்த்த மிதம் க்ஷௌமாம்பரம் ஷுபம் ||
வஸ்த்ரம் சமர்ப்பயாமி

8. ஸ்ரீகந்த குங்குமம் திவ்யம் கற்பூரா கருஸம்யுதம் |
கல்பிதம் தே மஹாதேவி ப்ரீத்யர்த்தம் ப்ரதிக்ருஹதாம்
கந்தம் சமர்ப்பயாமி

9. நீலோத்பல ஸுகல்ஹாரமாலத்யாதீனி ஷோபனே |
பத்மாதி கந்தவந்தீஷே புஷ்பாணி ப்ரதிக்ருஹ்யதாம் ||
புஷ்பம் சமர்ப்பயாமி

10. தூபம் க்ருஹாண தேவேஷி மனோஹாரி ஸுமங்களம்

ஆஜ்யமிஸ்ரம் து துளஸி பக்தஸ்யாபீஷ்டதாயினி ||
தூபம் சமர்ப்பயாமி

11. அஞ்ஞானதிமிராந்தஸ்ய ஞானதீப ப்ரதாயினி |
த்வயா துளஸி ப்ரீத்யர்த்தம் திஷோயம் ப்ரதிக்ருஹ்தாம் ||
தீபம் சமர்ப்பயாமி

12. சமஸ்த ஜகதாம் நாதே ப்ராணினாம் ப்ரியதர்ஷனே |
யதாஷக்தி மயா தத்தம் நைவேத்யம் ப்ரதிக்ருஹ்தாம் ||
நைவேத்யம் சமர்ப்பயாமி

13. நமோ பகவதி ஸ்ரேஷ்டே நாராயணி ஜகன்மயி |
துளஸி த்வரயா தேவி பானீயம் ப்ரதிக்ருஹ்யதாம் |
பானீயம் சமர்ப்பயாமி

14. அம்ருதேऽம்ருத சம்பூதே துளஸ்யம்ருத ரூபிணி |
கற்பூராதி ஸமாயுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம் |
தாம்பூலம் சமர்ப்பயாமி

15. தக்ஷிணீதக்ஷிணகரே த்வத்பக்தானாம் ப்ரியங்கரி |
கரோமிதே ஸதா பக்த்யா விஷ்ணுகாந்தே ஸதக்ஷிணாம் |
தக்ஷிணாம் சமர்ப்பயாமி

16. ப்ரதக்ஷிணாம் கரோமி த்வாம் வ்ருந்தாவன விஹாரிணி |
வ்ருந்தாரக ப்ரியே தேவி துளஸி பக்தவத்ஸலே ||
ப்ரதக்ஷிணாம் சமர்ப்பயாமி

17. நமோ நமோ ஜகத்தாத்ரே ஜகதாத்யை நமோ நம: |
நமோ நமோ ஜகத்பூத்யை நமஸ்தே பரமேஷ்வரி ||
நமஸ்காரான் சமர்ப்பயாமி ||

ப்ரஸாதம்மம தேவேஷி க்ருபயா பரயா ஸதா |
அபீஷ்டபல ஸித்யர்த்தம் குரு மே மாதவப்ரியே ||
ப்ரார்த்தனாம் சமர்ப்பயாமி ||

இத்யேவமர்ச்சயோன் நித்யம் ப்ராதரேவ ஷுசிர்னர: |
மத்யன்ஹேऽவாத ஸாயான்ஹே பூஜயேத் ப்ரியதோ நர: |

ஸர்வோபசாரை ரதவாஜாதுர் மாஸ்யை விசேஷத:
பூஜயேத் துளஸீம் தேவீம் அபூப பலபாயஸை; |

இவ்வாறாக மங்களம் சொல்லியவாறு, காலையில் சுத்தமாக துளஸி பூஜையை செய்ய வேண்டும். மூன்று வேளையும் இப்பூஜை செய்தால் உத்தமம். விசேஷமாக சாதுர்மாத காலத்தில் பூஜைக்கு தக்கதான அனைத்து பழ, புஷ்ப, அபூப, பாயசங்களை நிவேதனம் செய்து பூஜிக்க வேண்டும்.

இதி ஸ்ரீதுளஸி பூஜாமஹத்ம்யம் ஸ்ருணுயான்னர: |
ஸக்ருத்வாஃஸி படேன் நித்யம் ஸ கச்சேத்வைஷ்ணவம் பதம் ||

யார் இப்படியாக துளஸி பூஜையை செய்கிறாரோ, யார் இந்த விதானத்தை கேட்கிறாரோ, படிக்கிறார்களோ, அவருக்கு விஷ்ணு பதம் கிடைக்கிறது. இது இந்த வாயு புராணத்தில் இருக்கும் துளஸி மகிமையின் விதானம் ஆகும்.

# அத்தியாயம் 08
# துளஸியை சில விதி விதானங்களாலேயே பார்க்க வேண்டும்

பரமாத்மனின் பூஜையை நாம் எவ்வளவு ஸ்ரத்தா பக்திகளுடன் பூஜிக்கிறோமோ, அப்படியே அவனுக்கு பயன்படுத்தும் பொருட்களிலும் ஸ்ரத்தா பக்திகள் இருக்க வேண்டும். ஆகையாலேயே, சாலிகிராம, துளஸி, ஆகியவற்றை சில விதிகளுடன் பயன்படுத்த வேண்டும். துளஸியோ மிகவும் பவித்ரமானது. அசுத்தமான நிழல் விழுந்தாலும்கூட அது வாடிப் போகிறது. இது பொதுவாக அனைவரின் அனுபவத்திற்கு வந்திருக்கும் விஷயமே. ஆகையால் துளஸியை நடுவது, வளர்ப்பது, பறிப்பது ஆகியவற்றில் விதி, விதிவிலக்குகளை கவனிக்க வேண்டும்.

1. துளஸியை பறிக்கும்போது முதலில் துளஸிக்கு பிரதக்ஷிணை நமஸ்காரங்களை செய்து, இந்த ஸ்லோகங்களை சொல்லி, பின் பறிக்க வேண்டும்.

மாதா துளஸி கல்யாணி கோவிந்த சரணப்ரயே
கேஷவார்த்திஜினோமி த்வா ப்ரஸீதாஷுப தர்ஷனே
ப்ரதக்ஷிணாம் கரோமி த்வாம் வ்ருந்தாவன விஹாரிணி |
வ்ருந்தாகர ப்ரியே தேவி துளஸி பக்தவத்ஸலே ||

2. காலையில் எழுந்த உடனேயே துளஸி மரத்தின் அருகில் சென்று, வணங்கி, துளஸி மிருத்திகையை நெற்றியில் தரிக்க வேண்டும்.

யாத்ருஷ்டானி கிலாகனம் பஷமனீ ஸ்ப்ருஷ்ட்வா வமு:
பாவனீரோகாணா மபிவந்திதா நிரஸனீ ஸிக்தாந்தகத்ராஸினி |
ப்ரத்யா ஸத்தி விதாயனி பகவத: க்ருஷ்ணஸ்ய ஸம்ரோபிதா
ந்யஸ்தாச்சரணீ விமுக்தி பலதாதஸ்ம்யை துளஸ்யை நம: ||

3. துளஸி வந்தனே காலே ஸ்ரீகிருஷ்ணம் ஸம்ஸ்மரேத் கக ||
துளஸியை வணங்கும்போது, ஸ்ரீகிருஷ்ணனை நினைக்க வேண்டும். துளஸிக்கு அர்க்ய பிரதானம் கொடுக்க வேண்டும். முதலில் துளஸிக்கு தூய்மையான தண்ணீரால் அர்க்யம் கொடுக்க வேண்டும்.

துளஸி தளங்களை பறிக்கும்போது, துளஸியின் கணவனான ஸ்ரீஹரியின் மனதிற்கு வலி ஏற்படுவதால், அப்படி ஆகாதவாறு, துளஸியின் கிளைகள் முறியாதவாறு, மெதுவாக எடுக்க வேண்டும்.

துளஸி பறிக்கும்போது, கிளைகளிலிருந்து உதிர்ந்து விழும் ஒவ்வொரு உலர்ந்த இலையும்கூட ஸ்ரீஹரியின் பூஜைக்கு தக்கதே ஆகும்.

துளஸியை தக்க வாரம், நாட்களில் மட்டுமே பறிக்க வேண்டும். எடுக்கக்கூடாத நாட்களில் பறித்த துளஸி, தக்க பலன்களைக் கொடுப்பதில்லை. ஆபத்து காலங்களில், பூஜைக்காக துளஸியை பறிப்பதற்கு அனுமதி இருக்கிறது, ஆனால், த்வாதசியன்று மட்டும் எப்போதும் துளஸியை எடுக்கக்கூடாது. மருந்து முதலான மற்ற செயல்களுக்கு துளஸியை பயன்படுத்துபவர்கள்கூட ஸ்ரீஹரிக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிர்மால்ய துளஸியை பயன்படுத்த வேண்டும்.

எடுக்கக்கூடாத நாட்களில் பறிக்கப்பட்ட துளஸியினால், ஆயுர்வேதத்தின் மருந்தும்கூட அதன் வேலையை செய்வதில்லை.

ஸ்னானம் செய்து சுத்தமாக நகங்கள் படாமல் துளஸியை பறிக்க வேண்டும்.

பானுவாரே ப்ருகௌ பௌமே வ்யதிபாதே யுகாதிஷு |
நாஹரேத் துளஸீ பத்ரம் மத்யான்ஹோ பரிவ்யத்ருதௌ ||
ஸங்க்ராந்தௌ பக்ஷயோரந்தே த்வாதஷ்யாம் நிஷி ஸந்த்யயோ: |
துளஸீம் யேவிஜின்வந்தி தேவ்யபிரம்ம ஹண:ஸ்ப்ருதா: ||
(ஸ்ம்ருதி)

ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக் கிழமைகள், வியதீபாத, வைத்ருதி, யுகாதிகள், சங்க்ராந்தி, பௌர்ணமி, அமாவாசை, த்வாதசி, மதியத்திற்குப் பிறகு, இரவில், சந்த்யா காலங்களில், பர்வ காலங்களில் - இந்த காலங்களில் துளஸி பறிப்பது சரியல்ல. இந்த நாட்களில் துளஸியை பறிப்பவர்கள், பிரம்மஹத்யா தோஷத்திற்கு ஆளாகிறார்கள்.

ஸ்ரீதுளஸி தேவலோகத்தின் மிகவும் பவித்ரமான புஷ்பம் ஆகும். நிர்மால்யமே ஆனாலும், அதனை மறுபடி ஷுத்தோதகத்தால் ப்ரோக்ஷணம் செய்து, ஸ்ரீஹரிக்கு சமர்ப்பிக்கலாம்.

***

## அத்தியாயம் 09
## துளஸியின் பவித்ரத்தன்மை

ஷயனே போஜனே சைவ மலமூத்ர விசர்ஜனே |
நத்யசேத்துலஸீமாலாம் த்யாகே ச பிரம்மஹா பவேத் ||
ஷார்ங்க ஸம்ஹிதா

இங்கு சம்பிரதாயகமாக வந்திருக்கும் விஷயத்தை இப்படியாக அறிய வேண்டும். இரு துளஸி மாலைகளை செய்து கொள்ள வேண்டும். எப்போதும் போட்டுக் கொண்டிருக்கும் துளஸி மாலை

ஒன்று; தேவபூஜை சமயத்தில் அணிவிப்பது ஒன்று; பூஜை ஆனபிறகு, துளஸி மாலையை எடுத்து வைக்க வேண்டும். இன்னொன்றினை மட்டும் எப்போதும் எடுக்கக்கூடாது. யக்ஞோபவீதம் எப்படி தினமும் அணிந்திருக்கிறோமோ அதைப் போலவே துளஸி மாலையும் அணிந்திருக்க வேண்டும்.

துளஸ்யாம் வஸதே விஷ்ணு: கனகே து ரமேஷ்வரி |
தஸ்மாத் ஸுவர்ண ஸம்யுக்தா மாலிகா ஸர்வகாமதா ||

துளஸியில் விஷ்ணு நிலைத்திருக்கிறான். தங்கத்தில் மகாலட்சுமி நிலைத்திருக்கிறாள். ஆகையால், துளஸி மாலையை தங்கத்தில் செய்வித்து அணிவிப்பது, அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுகிறது.

சாலிகிராம, சக்ராங்கித, சுதர்ஷன ஆகியவை பகவந்தனுக்கு மிகவும் பிடித்தவை மற்றும் துளஸி மிகவும் விலைமதிப்பற்ற சாதனம் ஆகும். சாலிகிராம, சக்ராங்கிதங்கள் ஆகியவை வீட்டின் உள்ளே இருக்க வேண்டியவை. துளஸி மட்டும் வீட்டின் முன்னே, உள்ளே ஸ்வாமி சன்னிதியில் மற்றும் வீட்டைச் சுற்றிலும் இருப்பதாகும். தெய்வ சம்பத்தினைக் கொண்டு வருவதிலும், பக்தியை வளர்ப்பதிலும், அசுர சக்திகளை அழிப்பதிலும் துளஸி மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது.

துளஸி கானனம் சைவ க்ருஹே யஸ்யாவதிஷ்யதே |
தத்க்ருஹம் தீர்த்தபூதம் ஹி நாயாந்தி யமகிங்கரா: ||
(பத்ம புராண)

யார் வீட்டில் துளஸி வனம் இருக்கிறதோ, அந்த வீடு பரம பவித்ரமானதாகும். அங்கு யம தூதர்கள் எப்போதும் வருவதில்லை. துளஸி மாலை தரித்து, த்வாதச புண்ட்ரங்களை தரித்திருப்பவனை யம தூதர்கள் தொடுவதற்கு பயப்படுவார்கள்.

தன்யாஸ்தே மானவா லோகே யத்க்ருஹே வித்யதே கலௌ |
ஷாலிக்ராம ஷிலார்ச்சார்த்தம் துளஸி ப்ரத்யஹம் க்ஷிதௌ ||
(பத்ம புராண)

யார் வீட்டில் தினப்படி சாலிகிராம பூஜைக்காக, தவறாமல் துளஸி பயன்படுத்தப்படுகிறதோ, அந்த மனிதனே உலகத்தில் தன்யன்.

யஸ்மின் க்ருஹே ச திஷ்டேத துளஸி வ்ருக்ஷவாடிகா |
தர்ஷனாத் ஸ்பர்ஷனாச்சைவ பிரம்மஹத்யாதி பாதகம் |
தத்ஸர்வம் விலயம் யாந்தி தர்ஷனேனைவ நாரத ||
(பத்ம புராண)

ஹே நாரதனே, எந்த வீட்டில் துளஸி தோட்டம் இருக்கிறதோ, அதன் தரிசனம் மற்றும் ஸ்பரிசத்தினால் பிரம்ம ஹத்யா முதலான பாவங்கள் முழுமையாக நாசம் ஆகின்றன.

யத்ர யத்ர க்ருஹே க்ராமே வனே வா துளஸி பவேத் |
தத்ர தத்ர ஜகத்ஸ்வாமி ப்ரீதாத்மாச வஸேத்தரி: ||
(பத்ம புராண)

எந்தெந்த வீட்டில், கிராமத்தில், வனத்தில், துளஸி இருக்கிறதோ, அங்கங்கு ஜகத்ஸ்வாமியான ஸ்ரீஹரி, மிகவும் அன்புடன் நிலைத்து விடுகிறான்.

க்ருஹே தஸ்மின் ந தாரித்ர்யம் நாயோகி பந்து ஸம்பவன்
துக்கம் ந பயம் ரோகாஸ்துலஸி யத்ர திஷ்டதி ||

எந்த வீட்டில் துளஸி இருக்கிறதோ அங்கு ஏழ்மை இருக்காது. உறவினர்கள் அனைவரும் யோகிகளாக இருப்பர். துக்கம் இருக்காது. பயம் இருக்காது. நோய்கள் இருக்காது.

துளஸி க்ராண மாத்ரேண துஷ்டா பவதி ஸுந்தரி ||

நிர்மால்ய துளஸியை முகர வேண்டும் என்று தந்த்ரஸாரத்தில் ஆசார்யர் கூறியிருக்கிறார். அப்படி முகர்வதாலேயே துளஸி மகிழ்கிறாள்.

யத்ர கேஹாங்கணே தேவி பூஜ்யதே பக்தி மன்னரை: |
கிந்து ஸர்வாண்யபீஷ்டானி ப்ராப்னுவந்தி ந ஸம்ஷய: ||
(பத்ம புராண)

யார் வீட்டின் முற்றத்தில் தேவியான துளஸி பக்தியைக் கொண்ட மனிதனால், பூஜிக்கப்படுகிறாளோ, அவர் அனைத்து அபீஷ்டங்களையும்கூட அடைகிறான் என்பதில் சந்தேகம் இல்லை.

யார் துளஸியைக் கண்டாலும் அதனை புறக்கணித்து, நமஸ்காரம் ஆகியவற்றை செய்யாமல் விடுகிறாரோ, அத்தகையவர்கள் நரகத்தை அடைகின்றனர். மற்றும் அடுத்த பிறவிகளிலும், ஸ்ரீஹரியைப் பற்றி அறிவு பெறாமல், சம்சாரத்திலேயே மூழ்குகின்றனர்.

ஸர்வ பாப ஹரம் நித்யம் காமதம் துளஸி வனம் |
தீர்த்தம் பத்மவனம் ப்ரோக்தம் துளஸீகானனம் ததா |
(ஸ்காந்த புராண)

பவித்ரமான வீடு என்றால் பத்ம வனம். அதைப் போலவே துளஸி வனம்.

தர்ஷனம் நர்மதாயாஸ்து கங்காஸ்னானம் ததைவ ச |
துளஸீவன ஸம்ஸர்க்க: ஸமமேவ த்ரயம் ஸ்ம்ருதம் ||

தத்தம் பாத்யம் க்ருஹாணேதம துளஸீ த்வம் ப்ரஸீத மே ||

நர்மதா நதியின் தரிசனம், கங்கா நதியில் ஸ்னானம் மற்றும் துளஸி வனத்தின் ஸ்பர்ஷம் - இந்த மூன்றும் சமானம் ஆகும் என்று ஸ்ம்ருதிகளில் மேற்கோள் இருக்கிறது. (தரிசனத்திற்கு கண்கள் தேவை; ஆனால் குருடனாக இருந்தாலும் தொடுவதற்கு அவனுக்கு பாக்கியம் கிடைக்கிறது). இப்படி ஸ்பர்சத்தினால் மட்டுமே பாவங்கள் நாசம் அடைவது நிச்சயம்.

## ஸ்ரீதுளஸியில் நவ வித பக்தி

த்ருஷ்ட்வா ஸ்ப்ருஷ்ட்வா ததாத்யாத்வா கீர்த்திதா நாமகஸ்துதா |
ரோபிதா ஸஞ்சிதா நித்யம் பூஜிதா துளஸீஷுபா ||
நவதா துளஸி பக்திம்யே குர்வந்தி தினே தினே || (பத்ம புராண)

உன்னில் அனைத்து தேவதைகளும் நிலைத்திருக்கின்றனர். அனைத்து தேவதைகளும் உன்னிடம் தலைகுனிந்து வணங்குகின்றனர். ஹே துளஸிதேவியே. உனக்கு இந்த பாத்யத்தை சமர்ப்பிக்கிறேன். ஏற்றுக் கொண்டு, மகிழ்வாயாக. ஸ்ரீஹரியின் பாத பத்மங்களில் எப்போதும் நீ வசிக்கிறாய். அத்தகைய துளஸியின் பாதங்களை நான் வணங்குகிறேன். இதனால், ஸ்ரீஹரியின் சேவை பாக்யம் எனக்கு கிடைக்கட்டும்.

அர்ச்சன: ஸ்ரீதுளஸி தளத்தில் உள்ள 5317 பகவந்தனின் ரூபங்களை சிந்தித்து, அர்ச்சனை செய்ய வேண்டும். அப்படி செய்தால், ஸ்ரீஹரியின் அருள் கிடைக்கிறது.

வந்தனை: துளஸிக்கு நமஸ்காரம் என்று ப்ரதிக்ஷணை செய்தால், அப்போது இந்த ஸ்தோத்திரத்தை சொல்ல வேண்டும்.

யன்மூலே ஸர்வதீர்த்தானி யன்மத்யே ஸர்வதேவதா
யதக்ரே ஸர்வவேதாஷ்ச துளஸி த்வாம் நமாம்யஹம் ।
ப்ரதக்ஷிணம் கரோமி த்வாம் வ்ருந்தாவன விஹாரிணி
வ்ருந்தாரக ப்ரியே தேவி துளஸி பக்தவத்ஸலே ।।

துளஸிக்கு பிரதிட்சணை செய்வது என்றால் ஸ்வாமிக்கு ப்ரதிட்சணை நமஸ்காரம் என்றே ஆகிறது என்று இந்த வசனம் சொல்கிறது.

துளஸி வந்தனேகாலே ஸ்ரீகிருஷ்ணம் ஸம்ஸ்மரேத் கக ।।

தாஸ்ய: ஷண்மஹிஷியர்களில் உத்தமளான ஸ்ரீதுளஸி தேவி, ஸ்ரீஹரியின் உபசாரங்களை ஒரு தாஸியாகி எப்படி சிறப்பாக செய்கிறாளோ, அதன்படியே நம் மனங்களும் ஸ்ரீஹரியில் தாஸ்ய பாவத்தினால் ஒன்று கூடட்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும்.

ஸக்ய: ஸ்ரீதேவி தானே அனைதும் ஆகி, விரஜா நதி மற்றும் பரமாத்மனின் ஆயுத, ஆபரணங்களாகி உபசாரம் செய்கிறாளோ, லட்சுமி சன்னிதானம் கொண்டிருக்கும் ஸ்ரீதுளஸி, பரமாத்மனின் பாத கமலங்களில் எப்படி சேவை செய்கிறாளோ, அதன்படியே

பரமாத்மனின் பாத பத்மங்களில் என் மனம் இருக்கட்டும் என்று சிந்தனை செய்ய வேண்டும்.

ஆத்ம நிவேதனம்: ஸ்ரீதுளஸியின் மூலம் பரமாத்மனையே நினைக்க வேண்டும். அவன் ஒருவனே நம்மை காப்பாற்றக்கூடியவன். அவனே நம் தந்தை, குரு, அனைத்தும் ஆனவன்.

# அத்தியாயம் 10
# துளஸியின் மகிமை

சில ஆதாரங்கள் மூலம் துளஸியின் தோற்றம், அவளின் பவித்ரம் ஆகிய சிறப்புகளை பார்த்தோம். இதனால், துளஸியின் ஆராதனையின் தீக்ஷை எவ்வளவு சிறப்பானது என்பதை அறியலாம். மேல்நோட்டமாக பார்த்தால் இவை கதைகளைப் போல தெரிந்தாலும், எவ்வளவு தத்வங்களை அடக்கியிருக்கிறது என்பதை சர்வமூலங்களின் ஆதாரத்தில் புரிந்து கொள்வதற்காக சில கதைகளை இங்கு தொகுத்து கொடுத்திருக்கிறோம்.

முன்னொரு காலத்தில், நாரதர் ஸ்ரீமன் நாராயணனிடம் பல்வேறு புராணங்களைக் கேட்டு, பிறகு, துளஸியின் கதையைக் கேட்கும் நோக்கத்தில் - ஹே மகாவிஷ்ணுவே. பதிவிரதையான ஸ்ரீதுளஸிதேவி, உனக்கு எப்படி பிடித்தவள் ஆனாள்? அவள் எந்த இடத்தில் பிறந்தாள்? முற்பிறவியில் அவள் யார்? யாருடைய மகளாக இருந்தாள்? யாருடைய மனைவி? எந்த தவ சக்தியினால், இப்பேற்பட்ட உத்தமள் ஆனாள்?

ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயாதி கர்த்ருத்வம் உள்ளவனும், அனைத்து இடங்களிலும் பரிபூர்ணமாக நிறைந்திருப்பவனான, யோகிகளால் தியானிக்கப்படுபவனான, அனைத்து பிரபஞ்சத்திற்கு காரணிபூதனான, அனைவருக்கும் ஆதாரமாக இருப்பவனான, அனைவரையும் காப்பவனான, ஸ்ரீமன் நாராயணனை துளஸி எப்படி அடைந்தாள்? இவ்வாறு நாராயணனிடம் ப்ரியமாக இருந்தாலும், மர/செடி ரூபத்தில் அவள் இருக்க என்ன காரணம்? அசுரர்களால் கடத்தப்பட்டு ஏன் துக்கம் அடைந்தாள்?. இந்த என் அனைத்து

கேள்விகளையும் பரிகரிக்கத் தக்கவன் நீயே என்பதால், உன்னிடம் இவ்வாறு கேள்விகளைக் கேட்கிறேன்.

அப்போது நாராயணன் ஸ்ரீதுளஸியின் விவரங்களை இவ்வாறு கூறினான். முன்னர், விஷ்ணு பக்தனான தக்ஷஸாவர்ணி என்பவன், புண்யவந்தனாகவும், புகழ், பெருமை, தானம், ஆகியவற்றில் சிறந்தவனாக இருந்தான். அவனுடைய மகன் பிரம்மஸாவர்ணி. அவனும் தந்தையைப் போலவே, தர்மஷீலனாக, விஷ்ணு பக்தி உள்ளவனாக, பரிசுத்தமானவனாக இருந்தான். அவனின் மகன் தர்மஸாவர்ணி. இவனும் விஷ்ணுவான என்னில் பக்தி கொண்டு, ஜிதேந்திரியனாக இருந்தான். அவனின் மகன் ருத்ரஸாவர்ணி. அவனும் என்னில் விசேஷ பக்தியைக் கொண்டு, இந்திரிய நிக்ரஹம் செய்தவனாக இருந்தான். அவனுடைய மகனான தேவஸாவர்ணி, விஷ்ணு விரதங்களை செய்வதில் சிறந்தவனாக இருந்தான். அவனின் மகனான இந்த்ர ஸாவர்ணி, மகாவிஷ்ணுவான என்னிடமே தன் மனதை வைத்திருந்தான். இவனுடைய மகனான வ்ருஷபத்வஜ, ஈஷ்வரனின் பக்தனாக இருந்தான். அவனுடைய ஆசிரமத்தில் பரமேஷ்வரன் மூன்று தேவ யுகங்களின் வரை, தானே வசித்து வந்தான். தன் மக்களான குமாரஸ்வாமி மற்றும் கணபதியைவிட, அவன் மேல் பரமேஸ்வரனுக்கு அபாரமான அன்பு இருந்தது.

இதனால் கர்விஷ்டனான வ்ருஷபத்வஜ, அடுத்து விஷ்ணு பூஜை, விஷ்ணு கிங்கர பூஜையை (அதாவது மகாலட்சுமி பூஜை, சரஸ்வதி பூஜை) விட்டான். அத்துடன், அக்னிஷ்டோமாதிகளை, விஷ்ணு பூஜையை நிந்திக்கத் துவங்கினான். இதனால் கோபம் கொண்ட சூர்யதேவன், 'ஹே பூ-நாயகனே, நீ சிவனை முக்கியப்படுத்தி, நம்மை புறக்கணித்து லட்சுமிதேவியே முதலானவர்களின் பூஜைகளுக்கு அவமானம் செய்த காரணத்தால், உன் செல்வங்கள் அனைத்தும் அழியட்டும்' என்று சாபம் இட்டான்.

இதனால் கோபம் கொண்ட சங்கரன், தன் திரிசூலத்தை ஏந்தி சூரியனுடன் போரிடத் துவங்க, சூரியன் தன் தந்தையான கஷ்யப முனிவருடன் பிரம்மனை சரணடைந்தான். பிரம்மனோ, அவர்களுடன் வைகுண்டத்திற்கு வந்து நாராயணனிடம்

முறையிட்டான். அப்போது அதே சமயத்தில், சூரியனின் சாபத்தால் அனைத்து செல்வங்களையும் இழந்த வ்ருஷபத்வஜனுடன், சிவன் அங்கு வந்து, மூடனான தன் பக்தனை காக்க வேண்டும் என்று விஷ்ணுவிடம் வேண்டிக் கொண்டார்.

இந்த பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கையில், மனுஷ்யமானத்தின்படி 21 யுகங்கள் முடிந்து, தெய்வ சங்கல்பத்தினால் க்லுப்தகாலம் வந்து, வ்ருஷபத்வஜன் மரணமடைந்து, அவனுடைய மகனான ரதத்வஜன், அவனுடைய மகன் தர்மத்வஜ, குஷத்வஜ என்பவர்கள் பரம வைஷ்ணவர்களாகி, இழந்த ராஜ்ஜியம், செல்வங்களை திரும்பப் பெறுவதற்காக தவம் செய்ய முற்பட்டனர். இவ்வாறு நாராயணன், அவர்கள் இருவரின் மனைவியரில் கமலா என்னும் பெயரில் மகாலட்சுமியே வருவாள். அப்போது அவரின் வம்சத்தில் லட்சுமி கடாக்ஷம் உண்டாகும் என்று சொல்ல, தேவதைகள் தத்தம் ஸ்தானங்களுக்கு திரும்பினர்.

இவ்வாறு நாராயணன் நாரதருக்கு முன்னர் நடந்த விஷயங்களை சொல்லியவாறு, குஷத்வஜனின் மனைவியே மகாபதிவிரதையான மாலாவதி என்பவள். அவளின் கர்ப்பத்தில் பிறந்தவளே வேதவதி. அவள் பிறந்த காலத்தில், அனைத்து இடங்களிலும் வேத மந்திரங்கள் கேட்டதால், அவளுக்கு வேதவதி என்னும் பெயர் ஆயிற்று. இவள் மிகவும் அழகானவளாகவும், நாராயணனையே அடையவேண்டும் என்னும் விருப்பம் கொண்டவளாக புஷ்கர க்ஷேத்திரத்திற்குச் சென்று, கடும் தவம் புரியத் துவங்கினாள்.

ஆனால் அவளுக்கு இந்தப் பிறவியில் நாராயணனை அடைவது சாத்தியம் இல்லை. அடுத்த பிறவியில் அவள் நாராயணனை அடைவாள் என்னும் அசரீரி வாணியைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து கந்தமாதன பர்வதத்திற்குச் சென்று, சமாதி நிலையில் தவம் செய்யத் துவங்கினாள். ஒரு நாள் ராவணன் அங்கு வந்தான். அதிதி என்று இவள் ராவணனை உபசரிக்க, அவனோ இவளை அடையும் ஆசையில் அவள் கையை பிடித்தபோது, பரம பதிவிரதையான அந்த வேதவதி அவனுக்கு சாபம் கொடுத்தாள். உறவினர்களுடன் சேர்ந்து நீ முழுமையாக நாசம் அடைவாய்

என்று சொல்லி, பிற புருஷனால் ஸ்பர்சம் ஆனதால், அக்னியை வளர்த்து அதில் தேகதியாகம் செய்தாள்.

அடுத்து இதே வேதவதி, ஜனகராஜனின் குமாரியாகி ஸீதாதேவி என்று புகழ் பெற்றாள். லட்சுமி ஸ்வரூபளான இவளே தசரத நந்தனனான ராமசந்திரனின் மனைவியாகி, அடுத்து லங்கா தகனம், ராவண வதைகளுக்கு காரணள் ஆனாள். இதற்குள், யக்ஞேஷ்வரன், தான் அழைத்துப் போயிருந்த ஸீதாதேவியை ராமனிடம் கொண்டு சேர்த்தான். அந்த மாயாஸீதையே, அடுத்து திரௌபதிதேவி ஆனாள் என்று கதையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்து கணவர்களைப் பெறும் வரத்தினை சங்கரன் இவளுக்கு அளித்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

குஷத்வஜனின் மனைவியே மாதவி. சிறந்த ரூபம், குணங்களைக் கொண்டவள். லட்சுமி ஸ்வரூபளான ஒரு பெண் குழந்தை இவளின் கர்ப்பத்தில் வளர்ந்தது. இதனால் மாதவியின் அழகு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. ஒரு நல்ல நாளில், சுப லக்னத்தில், சுப யோகத்தில், சந்திரன், புதன், சுக்கிரன், குரு என்னும் கிரகங்களால் கூடிய சுப கார்த்திக பௌர்ணமியன்று, மிகவும் அழகானவளான அனைத்து அலங்காரங்களையும் கூடிய, ஒப்புமை கூறவே முடியாத ஒரு குழந்தை அவளுக்கு பிறந்தது. அவளுக்கு துளஸி என்று பெயர் வந்தது.

உடனே தவம் செய்வதற்கு அவள் பதரிகாசிரமத்திற்குச் சென்று, அங்கு தேவமானத்தின்படி லட்ச ஆண்டுகள் வரை தவம் செய்தாள். ஸ்ரீமன் நாராயணனே தனக்கு கணவன் ஆகவேண்டும் என்று விரும்பினாள். இவளின் தவத்திற்கு மெச்சி, சதுர்முக பிரம்மன் பிரத்யட்சமாகி, இந்த யுகத்தில் உனக்கு நாராயணன் கணவனாக வருவதற்கு சாத்தியம் இல்லை. அடுத்து வரும் பிறவியில் கண்டிப்பாக அது நடக்கும் என்றார்.

இந்த துளஸியே அடுத்து ஒரு கோப ஸ்த்ரீயாக இருந்து, ஸ்ரீகிருஷ்ணனின் அங்கசங்கத்தைப் பெற்று மகிழ்ந்து, தனக்கு அடுத்தும் அவனே பதியாக வேண்டும் என்று விரும்பினாள். அப்போது ஒரு முறை இவள் ஸ்ரீகிருஷ்ணனுடன் இருப்பதைக்

கண்டு ராதை கோபம் கொண்டாள். இவள் மனித குலத்தில் பிறக்க வேண்டும் என்று சாபம் கொடுத்தாள்.

இந்த கதையைக் கேட்ட பிரம்மதேவன், இது பரமாத்மனின் லீலை. இதனுடன் இன்னொரு கதையும் உள்ளது. சுதாமா என்னும் கோபாலகன், ராதாதேவியின் சாபத்தினால் தைத்ய யோனியில் பிறந்து, ஷங்கசூட என்னும் பெயரால் புகழ் பெற்றான். நீ அவனை அடைவாய். பின்னர் நீயே ஸ்ரீஹரியின் பிராண ப்ரியள் ஆகிறாய். வ்ருந்தாவனி என்னும் பெயர் பெறுவாய் என்னும் பிரம்மனின் வரத்தினால் துளஸி ஷங்கசூட என்னும் தைத்யனின் மனைவி ஆனாள். யோக மாயையாலும் பதிவிரதை ஆன காரணத்தால், தன் பதியிடம் அனைத்து சுக போகங்களை அனுபவித்தவாறு, அனந்த காலத்தின் வரைக்கும் அந்த தம்பதிகள் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

தைத்யனான ஷங்கசூடன் மிகவும் கொடூரமான செயல்களை செய்தான். இந்திராதி தேவர்களுக்கு அவர்களின் பதவி, இடங்களை பறித்தான். ஷங்கசூடனின் அட்டகாசம் தேவலோகத்தில் அனைத்து இடங்களிலும் பரவியது. தேவதைகள் அனைவரும் இதனால் துன்பம் கொண்டு, சங்கரன், பிரம்மனுடன் நாராயணனிடம் சென்று முறையிட்டனர். நாராயணன் அவர்களுக்கு சமாதானம் செய்து திருப்பி அனுப்பினான். பிறகு தேவதானவர்களின் போரில், காளிகா தேவியே வந்து ஷங்கசூடனுடன் போர் புரிந்தாள். ஷங்கசூடன் சங்கரனை போருக்கு அழைத்தான். கடைசியில் இருவரில் யாருக்கும் வெற்றி கிடைக்காமல், ஷங்கசூடன், காளிகாதேவியை பிரார்த்தனை செய்தபோது, ஷங்கரனின் தரிசனத்தால் பரம பக்தியுடன் அவனின் பாதங்களில் சரணடைந்தான்.

இதற்கு நடுவில் ஒரு வயதான பிராமணன், தனக்கு பிக்ஷையைக் கொடுக்க வேண்டும் என்று வேண்டினான். ஷங்கசூடனின் கவசத்தையே பிக்ஷையாகக் கேட்டான். ஷங்கசூடனும் உடனடியாக தன் கவசத்தை எடுத்துக் கொடுத்தான். அப்போது அந்த பிராமணனின் வேடத்தில் இருந்த நாராயணன், துளஸியிடம் சென்று தானே ஷங்கசூடன் என்றும், போரில் வென்று வந்திருக்கிறேன் என்றும் கூறினான். இதனைக் கேட்டு துளஸி அவனே தன் கணவன் என்று நினைத்து மகிழ்ந்தாள். ஆனால்,

பதிவிரதையான அவளுக்கு சந்தேகம் வந்தது. மாயையால் தன் ஸ்பர்ஷத்தை அடைந்தான் என்று சாபம் கொடுக்க தயாரானாள். அப்போது நாராயணன் தன் ஸ்வரூபத்தினால் வெளிப்பட்டான். துளஸியின் தவத்தின் பலனை தன் கொடுப்பதாக தெரிவித்தான். மற்றும் துளஸிக்கு ரமா சன்னிதானம் இருக்கும் என்றும் வரம் அளித்தான்.

வயதான பிராமண ரூபத்தினால் வந்து கவசத்தைப் பெற்றுக் கொண்டதாலும், துளஸியின் பதிவிரதம் பங்கம் ஆனதாலும், ஷங்கசூடன் போர்க்களத்தில் தோற்று, கொல்லப்பட்டான். தன் இறுதிக் காலத்தில், ஷங்கசூடன் ஸ்ரீஹரியின் பாத கமலங்களை நினைத்தவாறே உயிரை விட்டான். ஆகையால், அங்கு வந்த விமானத்தில் ஏறி தன் பட்டணத்தை சேர்ந்தான். ராதா கிருஷ்ணன் இருக்கும் ப்ருந்தாவனத்தை அடைந்து பக்தியுடன் ஸ்ரீகிருஷ்ண பாதங்களை பிடித்தான். இந்த ஷங்கசூடனின் எலும்புகளிலிருந்து மிகவும் சிறந்ததான சங்கு உண்டாயிற்று. அந்த சங்கு மிகவும் பரிசுத்தமான காரணத்தால் தேவதார்ச்சனையின் சமயத்தில், அந்த சங்கோதகம், தேவதைகளுக்கு மிகவும் ப்ரியமானது. அங்கு லட்சுமியும் நிலைத்தாள். துளஸி, நாராயணனைக் கண்டு மகிழ்ந்தாலும், தன் கணவனின் இறப்பிற்கு அவன் காரணம் ஆனதால், நீ கல் ரூபத்தில் நிற்பாயாக என்று சாபம் அளித்தாள்.

ஸ்ரீஹரி அவளுக்கு முற்பிறவிகளின் சிந்தனையைக் கொடுத்து, அவள் தனக்காக செய்த மிகவும் கடினமான தவங்களை நினைவு படுத்தினான். நீ திவ்ய தேகத்தை தரித்து, என்னுடன் சங்கமித்து, ரமா சன்னிதானத்தைப் பெற்று, கண்டகி என்னும் பெயரால் நதியாகி பாய்வாயாக. உன் உடலிலேயே நானும் நிலைத்திருப்பேன். அங்கு கோடிக்கணக்கில் இருக்கும் என் சாலிகிராம சிலைகள் கிடைக்கும். எந்த பிராமணன், இந்த சாலிகிராம சிலைகளில் ஸ்ரீஹரியை சிந்தித்தவாறு அபிஷேகங்களை செய்து, தீர்த்த பிராசனம் செய்கிறானோ, அவனுடைய கைகளை பிடிப்பதற்கு பிரம்மாதி தேவதைகளும் மகிழ்ச்சி அடைகின்றனர். அவன் அனைத்து பாவங்களிலிருந்து முக்தன் ஆகிறான் என்று வரம் அளித்தான்.

இப்படியாக உனக்கு வரம் அளித்தேன் என்று கூறிய ஸ்ரீஹரி, நீ துளஸி என்னும் மர ரூபத்தினால் புகழ்பெற்று, மூன்று உலகங்களிலும் தேவபூஜைக்குத் தேவையான பூக்களில் உத்தமள் ஆகிறாய். நான் இருக்கும் இந்த துளஸி மரத்திலேயே அனைத்து தேவதைகளும் நிலைத்திருப்பார்கள். யார் துளஸி இலையினால் கலக்கப்பட்ட தண்ணீரால் அபிஷேகம் செய்கிறார்களோ, அவர்களுக்கு 1000 குடங்களில் அமிர்தம் நிரப்பி அபிஷேகம் செய்த பலன் கிடைக்கிறது. ஸ்ரீஹரியின் அன்பும் கிடைக்கிறது. கார்த்திக மாதத்தில் துளஸி பத்ர தானத்தினால் 10,000 கோதானம் செய்த பலன் கிடைக்கிறது. இதைப் போலவே நிஷித்த நாட்களில் துளஸி பறிப்பதால், தனக்கு மிகவும் வலிக்கும் என்றும் இந்த புராணத்தில் ஸ்ரீஹரியே கூறியிருக்கிறார்.

பிருந்தாவனத்தில் ஸ்ரீதுளஸி எப்போதும் நிலைத்திருக்கிறார். இந்த புராணத்தை சாட்சாத் நாராயணனே நாரத மகரிஷிக்கு சொல்லியிருக்கிறார் என்பது சிறப்பான விஷயம் ஆகும்.

## துளஸியின் மகத்துவம்

துளஸியின் மகத்துவத்தை பிரகலாதராஜர் கூறியது பத்ம புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. துர்காரண்யத்தின் அரசன் சுஷேண. அவனுடைய மனைவி வஸுஸேனா. அவள் ஒரு பதிவிரதா ஷிரோமணி. மிகவும் அழகானவளாக இருந்தாள். அவர்களுடைய மகள் தேவஸேனா. சிறப்பான ரூப, குணங்களைக் கொண்டவள். அவளுடைய மனம், சிறு வயதிலிருந்தே ஸ்ரீஹரியில் நிலைத்து எப்போதும் பூஜை, அதிதி உபசாரம் அவர்களுடைய சேவை, துளஸி பூஜை ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தது. அவள் தக்க வயதிற்கு வந்தபோது அவளுக்கு ஒரு சரியான வரன் பார்க்க வேண்டும் என்று தந்தையான சுஷேணனுக்கு சிந்தனை வந்தது. அதற்காக ஒரு சுயம்வரத்தை ஏற்பாடு செய்தான். அனேக நாடுகளிலிருந்து ராஜகுமாரர்கள் அந்த சுயம்வரத்திற்கு வந்தனர்.

தன்னை திருமணம் செய்பவனுக்கு, தத்போதனை செய்யும் சாமர்த்தியம் இருக்கவேண்டும் என்று நினைத்து, தேவசேனை ஒரு சிறப்பு கேள்வியினைக் கேட்டாள். அது என்னவென்றால், நீங்கள்

ஷ்வேதத்வீபத்தை பார்த்திருக்கிறீர்களா?. அதற்கு அங்கு வந்த அரசகுமாரர்கள் அனைவரும் இல்லை என்றே கூறினர். கடைசியில், தேவதத்தன் என்றொருவன், சொல்லும் பதில் பொய் என்றாலும் பரவாயில்லை என்று கூறி, தான் ஷ்வேதத்வீபத்தை பார்த்திருக்கிறேன் என்று, அதன் வர்ணனையை செய்தான். ஆனால், இவன் பொய் கூறுகிறான் என்று அரசகுமாரிக்கு தோன்றியது. இவனை அவமானப்படுத்தி துரத்துங்கள் என்றாள். அதன்படியே அவனை துரத்திவிட்டனர்.

இதனால் அந்த தேவதத்தனுக்கு எப்படியாவது ஷ்வேதத்வீபத்திற்கு செல்லவேண்டும் என்னும் விருப்பம் உண்டாயிற்று. மகேந்திர பர்வதத்திற்கு சென்றான். அங்கு சாட்சாத் விஷ்ணு ஸ்வரூபரான பரசுராமதேவர் அவனுக்கு உபதேசம் செய்து, பதரிக்குச் சென்று அங்கு இருக்கும் தபோநிதிகளை கேள் என்று ஆணையிட்டார். அதன்படி தேவதத்தன், பதரிக்குச் சென்று, ஞான விக்ஞான சம்பன்னரான ரிஷிகளை வணங்கி, தன் பிரார்த்தனையை முன்வைத்தான். அப்போது அவர், ஷ்வேதத்வீத முதலான தாமங்களுக்கு, காம குரோதங்களைக் கொண்ட இந்த தேகத்தினால் செல்வதற்கு சாத்தியம் இல்லை. ஆனால் ஒரு வழி இருக்கிறது. ஸ்ரீதுளஸிதேவியை விசேஷமாக வணங்க வேண்டும். அவளின் பிரசாதத்தினால் ஷ்வேதத்வீபத்தை பார்க்கலாம் என்றார்.

பின்னர் அந்த ரிஷிகள், தங்களை சரணடைந்த தேவதத்தனுக்கு துளஸியின் ஆராதனையின் விதானத்தை உபதேசம் செய்தனர். அற்புதமான ஆராதனையை செய்ய வேண்டும் என்று கூறினர். இந்த மந்திரத்தை சொல்வதற்கு யோக்ய குருகளிடமிருந்து இந்த மந்திரத்தின் உபதேசம் ஆகவேண்டும் - அது இல்லாமல் சொல்லக்கூடாது என்றனர்.

துளஸி ஸ்ரீ ஸகஷுபே பாபஹாரிணி புண்யதே |
நமோஸ்து நாரதனுதே நாராயண மன: ப்ரியே ||

இந்த மந்திரத்தை ஒரு மனதுடன் 7 கோடி முறை, பகவந்தனை நினைத்தவாறு ஜெபிக்க வேண்டும் என்றனர். தேவாதி தேவதைகளும் துளஸியின் சேவையை செய்து, ஸ்ரீஹரியின் ப்ரீதியை சம்பாதிக்கின்றனர். துளஸியை ப்ருந்தாவனத்தில்

பிரதிஷ்டை செய்து யதாவிதி அவளை பூஜித்து தேவரை அர்ச்சனை செய். பால் அபிஷேகத்தினால், ஸ்ரீஹரி நிர்மால்யத்தினால், கந்த புஷ்பாதிகளால் துளஸியை அர்ச்சனை செய். இதனால் துளஸி மகிழ்கிறாள். இதே தேகத்தினால் ஷ்வேதத்வீபத்தை பார்க்கும் சௌபாக்கியம் வருகிறது என்று உபதேசம் செய்தனர்.

அவர்களுடன் உபதேசத்தைப் போல, தேவதத்தன் துளஸியை வணங்கினான். பக்தி சிரத்தையுடன் 12 ஆண்டுகளுக்குப் பின், துளஸி, அவனுக்கு கனவில் தரிசனத்தை அளித்தாள். நரநாராயணாசிரமத்திற்கு வந்த தேவதத்தனுக்கு கருடனின் தரிசனம் ஆயிற்று. அங்கிருந்த பயங்கரமான சர்ப்பத்தை அது அழித்து உதவி செய்தது. அடுத்து தேவதத்தன், அதன் முதுகு மேல் அமர்ந்து உப்புக் கடல், கரும்புச்சாறு கடல், நெய் கடல், தயிர் கடல், நன்னீர் கடல் ஆகியவற்றை தாண்டி பாற்கடலுக்குச் சென்றான். அங்கு திவ்யமான நகரம் இருந்தது. அதுவே ஷ்வேதத்வீபம். கண்ணை பறித்துக் கொண்டிருந்த அந்த நகரத்தை அவனால் பார்க்க முடியவில்லை. கீழே விழுந்த தேவதத்தன், அடுத்து துளஸியின் அரண்மனையிலேயே இருந்தான்.

அங்கேயே இருந்த தேவஸேன, இறந்ததைக் கண்டு மிகவும் துக்கமடைந்தான். பின்னர் தேவதைகளின் ஆணைப்படி துர்காரண்ய புரத்திற்கு வந்து சேர்ந்தான். அரசனான சுஷேனனைக் கண்டு நடந்த விவரங்கள் அனைத்தையும் கூறினான். ஷ்வேதத்வீபத்தில் மரணமடைந்த தேவசேனையை பார்த்த விஷயத்தை கூறினான். இதனைக் கேட்ட உடனேயே தேவசேனையின் பெற்றோர் இறந்தனர். அடுத்து, தேவதத்தன், பரசுராமரின் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தான். அவர் தன் ஞான த்ருஷ்டியினால், கண்டதை அவனிடம் கூறினார்.

துளஸி சேவையை செய்வதற்கு ஷ்வேதத்வீபத்திற்கு வந்த நீ, அப்போது துளஸிக்கு சாமரம் வீசிக் கொண்டிருந்த தேவசேனையை பார்த்தாய். இதனை பார்த்த துளஸி கோபம் கொண்டு சாபம் கொடுத்தாள். நீ மகரிஷியான ஸ்ரீகரரின் சிஷ்யனாக இரு; தேவசேனை தர்ம பிரஷ்டளாக இருக்கட்டும். பின்

நீங்கள் இருவரும் மரணமடைய வேண்டும் என்று சாபம் கொடுத்தாள். பின்னர், ஸ்ரீகரரின் உதவியால் சாபவிமோசனத்தைப் பெற்றீர்கள்.

தேவசேனைக்கு முற்பிறவியின் நினைவு இருக்கிறது. ஆகையால், அவள் ஷ்வேதத்வீபத்தை பார்த்திருக்கிறீர்களா என்று அனைவரையும் கேட்கிறாள். நீ முற்பிறவியின் குருகளிடமிருந்தே துளஸி மந்திரத்தைப் பெற்று ஷ்வேதத்வீபத்திற்கு சென்றாய். தேவசேனை மரணமடைந்து தன் உலகத்தை அடைந்தாள். நீ கூட இங்கேயே இருந்து, துளஸி மந்திரத்தால் புனிதன் ஆகு என்றார். இதனால், தேவதத்தன் சிறப்பான துளஸி மந்திரத்தை ஜெபித்து, சேவைகளை செய்து, தேவசேனையை அடைந்து, ஸ்ரீஹரியின் அருளுக்கு பாத்திரர் ஆனான்.

இவ்வாறு துளஸியின் சேவையினால் தேவதத்த மிகச்சிறந்த கதியை அடைந்தான். தர்மத்தை அறிந்து துளஸி சேவை செய்தால், அவளின் அருளுக்கு கண்டிப்பாக பாத்திரர் ஆவார்கள். அவளுடைய சேவையில் அதர்மம் ஆனால், அவளுடைய கோபத்திற்கு பாத்திரர் ஆவதில் சந்தேகம் இல்லை என்றும் புராணங்களிலிருந்து அறிய வருகிறது.

**2. பிரகலாதராஜர் கூறிய இன்னொரு இதிகாச கதை இவ்வாறு இருக்கிறது.**

உஜ்ஜயினியின் அரசன் உதயனன். சிறந்த பக்திமான். அவனுடைய மனைவி சுஷீலா. மிகவும் பதிவிரதை. கணவனுக்கு தக்க மனைவியாக இருந்தாள். ஆனால் இவர்களுக்கு இருந்த ஒரே குறை - மக்கள் இல்லாததே ஆகும். தங்களது வயதான காலத்தில், புத்திர ஆசையை துறந்து, தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டனர். அதிகமான தான, தர்மங்களை செய்தவாறு, யமுனா நதியின் கரையில் இருந்த வசிஷ்டரின் ஆசிரமத்திற்குச் சென்று சேர்ந்தனர். வசிஷ்டரின் சேவையை மிகவும் சிரத்தையுடன் செய்தனர். இதனைக் கண்டு மகிழ்ந்த வசிஷ்டர், அவர்களிடம் விசாரிக்க, தமக்கு வயதாகிவிட்டாலும், புத்திர வாரிசு இல்லாத சோகத்தைப் பற்றி கூறினர்.

அப்போது வசிஷ்டர், முக்காலங்களையும் சிந்தித்து, அடுத்து உங்களுக்கு குழந்தை பிறக்கும். இதில் சந்தேகம் இல்லை என்று கூறினார். அப்போது அந்த அரசன் தமக்கு மறுபடி இளமை வருமா என்று கேட்டபோது, உங்களின் குல அபிவ்ருத்திக்காக, ஸ்ரீதுளஸியின் சன்னிதானத்துடன் கூடிய ஸ்ரீஹரியை பூஜித்து அர்ச்சிக்குமாறு கூறினார்.

துளஸிதேவி, லட்சுமிதேவியின் விசேஷ சன்னிதானத்தைக் கொண்டிருக்கிறாள் என்று அறிய வேண்டும். ரமாதேவியின் நட்பினை பெறுவதற்காகவே, ஸ்ரீஹரியின் மனைவி ஆகியிருக்கிறாள். இத்தகையவளுக்கு அசாத்தியமானது எதுவும் இல்லை என்று அறி. துளஸி, சாமான்யள் அல்ல. இறந்தவர்களையும் உயிர்ப்பிக்கும் அமிர்தமே ஸ்ரீஹரியால் அவளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், சந்தேகமின்றி உங்களுக்கு முதுமை நீங்கி, மறுபடி இளமை வந்து, கடைசியில் பரதன் என்னும் மகனும் பிறப்பான் என்று ஆசிர்வாதம் செய்து, மந்திரோபதேசம் செய்தார்.

அதன்படியே, அந்த தம்பதிகள் துளஸியில், ஸ்ரீஹரி ரமாதேவியரின் மிகச்சிறந்ததான சேவையை செய்து, துளஸியின் அருளுக்கு பாத்திரர் ஆயினர். அரசன் தன் ராஜ்ஜியத்தில் மிகவும் சிரத்தா பக்தியுடன் துளஸி வனங்களை நிர்மாணம் செய்தான். கற்பூரம், ஏலக்காய், லவங்கங்களால் நிறைந்த தண்ணீர் ஊற்றி வளர்க்கப்பட்ட பசுவின் பாலினை அந்த துளஸி செடிகளுக்கு ஊற்றினான். இதனால் ஸ்ரீதுளஸி அந்த தோட்டத்தில் மிகவும் அழகாக வளர்ந்து வந்தாள். அங்கு ஸ்ரீகிருஷ்ணனின் ஒரு பிரதிமையை வைத்து அர்ச்சித்தான்.

1,000 சாலிகிராமங்கள், 1,000 துளஸி தளங்கள், 1,000 நாமங்கள் ஆகியவை அருகில் இருந்தால் சாவு வராது. இறப்பு விலகிப் போகிறது. மறுபடி இளமை வருகிறது. இதற்கு உதயனனே சாட்சி. வசிஷ்டரின் ஆணையின்படி செய்த சுஷீலா மற்றும் உதயனன், தினந்தோறும் தீர்த்தத்தினால் தேகத்தை ப்ரோக்ஷணம் செய்து கொண்டு, தீர்த்தத்தை ஏற்றுக் கொண்டு, தினமும் பக்தியுடன் ஸவாமிக்கு அர்ப்பித்த துளஸி தளங்களை வணங்கி, சிறந்த

பக்தியினால் ஸ்ரீஹரி சேவையை செய்தவாறு துளஸி வனத்திலேயே 1 ஆண்டு காலம் இருந்தனர்.

துளஸி மந்திரத்தின் பலனால், இளமையை திரும்பப் பெற்றனர். இதனைக் கண்டவர்கள் மிகவும் வியந்தனர். வசிஷ்டர் கூறியதைப் போல சுஷீலைக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு பரதன் என்று பெயர் வைத்தனர். அந்த குழந்தை பின்னர் மாமன்னர் ஆனார். காலகிரமத்தில், சுஷீலா உதயனன் இருவரும் விஷ்ணு லோகத்தை அடைந்தனர். இது பத்ம புராணத்தில் வரும் கதை ஆகும்.

4. ஸ்ரீசுதர் கூறியபடி துளஸியை தலையில் தரித்தவர்கள் புண்யவந்தர்கள் ஆவர். இது அனைத்து பாவங்களையும் போக்கவல்ல கதையாக இருக்கிறது. இதனைக் கேட்பதே புண்ணியத்தைக் கொடுக்கிறது. கிருஷ்ணக என்று ஒரு பிராமணன் இருந்தான். பெயருக்குத் தக்க குணம் அவனிடம் இருந்திருக்கவில்லை. மூர்க்கனாக, திருடனாக இருந்தான். எந்தவொரு சத்கர்மங்களிலும் அவனுக்கு ஈடுபாடு இருந்திருக்கவில்லை. சந்த்யா, பூஜைகளைப் பற்றிய அறிவே அவன் பெற்றிருக்கவில்லை.

ஒரு நாள் இவன் கட்டைகளை பெறுவதற்கு காட்டிற்குள் வந்தான். அங்கு அடர்த்தியாக வளர்ந்திந்த துளஸி வனத்தைக் கண்டான். இதனால் ஈர்க்கப்பட்ட கிருஷ்ணக, இந்த துளஸியைப் பறித்து, விற்று, காசு சம்பாதிக்கலாம் என்று நினைத்தான். அவனுக்கு துளஸியின் மகிமை புரிந்திருக்கவில்லை. அது ஒரு வகைச் செடி என்று மட்டுமே அறிந்திருந்தான். துளஸியை பறித்து, புற்கட்டுகளுடன் தன் தலையில் ஏந்தி வந்தான்.

தற்செயலாக, அன்றே அவனுடைய கடைசி நாளாக இருந்தது. யமகிங்கரர்கள் அவன் பின்னே வந்து கொண்டிருந்தனர். ஆனால் அவன் தன் தலையில் துளஸியை ஏந்தியிருந்த காரணத்தால், அவர்களால் அவனை தொடக்கூட முடியவில்லை. அவன் பின்னே விஷ்ணு சக்கரம் சுற்றிக் கொண்டிருந்தது. அந்த புற்கட்டின் நடுவில் ஒரு பாம்பு மறைந்திருந்தது. அது அவனை கடிப்பதற்கு காத்திருந்தது. ஊருக்குள் வந்த கிருஷ்ணக, பார்த்தது ஒரு

பிராமணனின் வீட்டினையே. அந்த வீட்டின் முன் நின்றிருந்த அந்த பிராமணன் மிகவும் நிஷ்டாவந்தனாக இருந்தான். அவனுக்கு கிருஷ்ணகனின் பின்னே வந்து கொண்டிருந்த யமதூதர்களும், அவனுடைய இறுதிக் காலமும் தெரிய வந்தது. உடன், அவன் மேல் உள்ள கருணையால், அந்த யமதூதர்களிடம் வேண்டினான். இந்த பிரச்னையிலிருந்து அவனால் எப்படி தப்பிக்க முடியும் என்று அந்த யமதூதர்களையே கேட்டான். அந்த யமதூதர்களும் இவன் மேல் கருணை கொண்டு இவ்வாறு கூறினர்.

இவனுடைய ஆயுள் முடிந்திருக்கிறது. ஆனால், துளஸியை தலையில் தாங்கியிருப்பதால், இவனை விஷ்ணு சக்ரம் காத்து வருகிறது. இவன் தன் தலையின் சுமையை கீழே வைத்தவுடன், பாம்பு கடித்து இறக்கப்போகிறான் என்றனர். இதற்கு பரிகாரம் சொல்லுங்கள் என்று கேட்டபோது, அந்த யமதூதர்கள் - த் என்றால் மரணம் என்று அர்த்தம். லஸி என்றால் ஒளிர்கின்றனர் என்று அர்த்தம். மரணமடைந்தவர்களையும்கூட துளஸி பிழைக்க வைக்கிறாள். ஆகையாலேயே அவள் துளஸி. அத்தகைய துளஸியை தலையில் தாங்கியிருப்பதாலேயே, இந்த கிருஷ்ணகன் பிழைத்திருக்கிறான்.

துளஸியால் தன்னை அர்ச்சித்தவர்களையும், அதனை தலையில் தாங்கியவர்களையும் காக்க வேண்டும் என்பது பகவந்தனின் ஆணை. சங்கல்பம். இவனுக்கு இந்த துளஸியின் அறிமுகமே இல்லையாகையால், இவனுக்கு நீங்கள், ஒரு முறை செய்த துளஸி பூஜையின் புண்ணியத்தை கொடுத்தால், இவன் பிழைக்கிறான் - இவனுக்கு புண்ணியம் கிடைக்கிறது என்றனர். அதன்படியே இந்த பிராமணன், தான் செய்த ஒரு நாளின் துளஸி பூஜையின் பலன்களை கிருஷ்ணகனுக்கு கொடுத்தபின், யமதூதர்கள் அங்கிருந்து கிளம்பினர்.

பின்னர், கிருஷ்ணகனிடம் நல்லதொரு மாற்றம் தென்பட்டு, அந்த பிராமணன் மூலமாகவே அனைத்து தர்மங்களையும் அறிந்து வைஷ்ணவ க்ஷேத்திரத்திற்குச் சென்று, அங்கு ஸ்ரீஹரியை துளஸியால் தினமும் சேவை செய்து, பின் சத்கதியை அடைந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

### 5. வாரிசு கொடுப்பவள் ஸ்ரீதுளஸி

பிரகலாதராஜர் கூறிய இன்னொரு துளஸி மஹாத்ம்யம் இவ்வாறு உள்ளது. துளஸியை வணங்கியதால் தக்க பலனைப் பெற்ற தசரத மஹாராஜனின் கதை இது. வாரிசு இல்லாத மகாராஜனுக்கு மிக்க கவலை உண்டாயிற்று. வைஷ்ணவ பக்தன் ஆகையால், கௌசல்யையுடன் சேர்ந்து ஒரு ஆண்டு வரை, அவன் ஸ்வாமி பூஜை செய்தான். அதன் பலனாக ஒரு நாள், அவனுடைய கனவில் பகவந்தன் துளஸியை பூஜிக்குமாறு கூறினான்.

அதன்படியே தசரத மகாராஜன், கௌசல்யையின் அரண்மனையின் அங்களத்தில் துளஸிச்செடியை நிர்மாணித்து, அங்கு விதிப்படி துளஸிதேவியை ப்ருந்தாவனத்தில் வைத்து அர்ச்சனை செய்தான். பால் முதலான ஸாதனங்களை துளஸிக்கு சமர்ப்பித்தான். தசரத மகாராஜனின் பட்டமஹிஷியான கௌஸல்யையும் துளஸீயின் முன் விதம்விதமான கோலங்களைப் போட்டு, த்வஜ சாமர தர்பண ஆகியவற்றால் சேவை செய்தாள். பற்பல விதமான உபசாரங்களாலும் மற்றும் பிராமண போஜனங்களாலும் துளஸியை அர்ச்சித்தாள். மந்திரங்களை படித்தாள்.

அரசனுடன் சேர்ந்து, பக்தி ஶ்ரத்தையுடன் ஒரு ஆண்டு வரை இவ்வாறு பூஜித்ததால், துளஸி மிகவும் மகிழ்ந்து, சர்வாலங்கார பூஷிதளாகி, அவர்களை அருளும்பொருட்டு அவர்களுக்கு தரிசனம் அளித்தாள்.

அப்போது தசரத மகாராஜன் - தாயே நீ உலகத்தையே காப்பவளாக இருக்கிறாய். ஸ்ரீஹரிக்கு மிகவும் பிரியமானவள். உன் பூஜையால் மக்கள் பாவங்களிலிருந்து விடுபடுகின்றனர். உன் பிரஸாதத்தினால் மக்கள் வரம் வேண்டும் - என்று வேண்டினான். தமக்கு சந்தானத்தை அருள வேண்டும் என்று தம்பதிகள் வேண்டினர்.

அப்போது துளஸி - அரசனே, உன் சேவையால் நான் மகிழ்ந்திருக்கிறேன். உலர்ந்த என் காஷ்டங்களால் நீ புத்ர காமேஷ்டி யாகத்தை செய். இவை மிகவும் சிறந்த காஷ்டங்கள் ஆகும். விஷ்ணுவிற்கு தினமும் பாயசத்தை நிவேதனம் செய்.

விஷ்ணு நிவேதித பாயசத்தினால் தினமும் பிராமணர்களுக்கு போஜனம் செய்வி. இதனால் ஸ்ரீஹரி மகிழ்ந்து, உனக்கு மகனாகப் பிறப்பான். உலக நாயகனான பரமாத்மனே, உனக்கு மகனாகப் பிறப்பான் - என்று வரம் அளித்தாள். இவ்வாறே துளஸி பூஜையை செய்த தசரத மகாராஜன், புத்ர காமேஷ்டி யாகத்தை செய்து, அந்த பூஜா பலன்களால் நான்கு பேர் மக்களைப் பெற்றான். பரமாத்மனே ராமனாக அவதரித்தான்.

எந்தவொரு விருப்பங்கள் நிறைவேறுவதற்கும் ஸ்ரீதுளஸி பூஜை சிறந்தது என்பதே இதன் நோக்கம். அமாவாசை காலங்களில், சிரார்த்தத்தில், கிரகண சமயத்தில், விசேஷமாக இந்த மகிமைகளை படித்தால், மிகவும் அதிகமான புண்ணியம் கிடைக்கிறது.

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி நாட்களில் மற்றும் ஏகாதசி, த்வாதசி, சிவராத்திரி அன்று, மகா நவமி, ராம நவமி, சிவ, துர்கா ஆகிய தேவதா பூஜா சமயங்களில், பற்பல விரதங்களை செய்யும்போது, சிரத்தையுடன் துளஸி சேவையை செய்ய வேண்டும். இதனால் ஐஹிக மற்றும் பாரமார்த்திக விருப்பங்கள் நிறைவேறி கடைசியில் சத்கதி கிடைக்கிறது என்று ஸூத ஸம்ஹிதை சொல்கிறது.

9. துளஸியின் மேல் வீசிய காற்றிற்கு அனைத்து பாவங்களையும் போக்கும் சக்தி உள்ளது. துளஸியின் மேல் வீசும் காற்று எந்த இடத்தில் பரவுகிறதோ, அங்கு வசிப்பவர்களின் பாவங்கள் களைகின்றன. ஷௌனகாதிகள் இதைப் பற்றி கூறிய இதிகாசம் இவ்வாறு உள்ளது.

பௌண்ட்ரக என்னும் ஒரு துஷ்டன் இருந்தான். தினமும் மிருகங்களை வேட்டையாடி, கொன்று, தின்பதே இவனுடைய பழக்கமாக இருந்தது. பிராமணர்களின் செல்வங்களை களைந்து மகிழ்ந்திருந்தான். பற்பல விதமான பாவ கர்மங்களை செய்து, கோ-ஹத்யா, ஸ்த்ரி-ஹத்யைகளையும் பயமின்றி செய்து, வாழ்ந்து வந்தான். இப்படியாக தவறான வாழ்க்கை வாழ்ந்து வந்த இவன் இருந்த இடத்தில் தண்ணீர் இன்றி காய்ந்து போனது. பின் மற்றவர்களை கொன்று தின்னத் துவங்கினான்.

ஒரு நாள் இவனுக்கு தின்பதற்கு எதுவும் கிடைக்கவில்லை. கடைசியில் இவனின் பசிக்கு, இவன் தாய், தந்தை, மனைவி மற்றும் இவனது மக்களே பலி ஆயினர். பசி வந்தால் துஷ்டர்கள் எத்தகைய கொடும் செயல்களை செய்கிறார்கள் என்பதற்கு இவனே சாட்சி.

கடைசியில் ஒரு நாள் இவனுக்கு தின்பதற்கு எதுவுமே கிடைக்காமல், காட்டில் சுற்றிக் கொண்டிருந்தபோது இவனுக்கு ஒரு சிங்கம் தென்பட்டது. இவன் சிங்கத்தை கொல்ல நினைத்தான். அந்த சிங்கமும் இவனை கொல்ல நினைத்தது. கடைசியில் சிங்கமே வென்றது. பௌண்ட்ரகன் உயிர் விட்டு கீழே விழுந்தான். அப்போது அவனுக்கு தன் கர்வம் போனது. அப்போது எங்கிருந்தோ வந்த, துளஸியின் மேல் பரவிய காற்று இவன் மேல் விழுந்தது. இவனுக்கு தன் தாயின் பாசம் மிக்க அணைப்பு நினைவுக்கு வந்தது. அந்த காற்று, அவனுக்குள் இருந்த நல்ல மனதினை வெளியே கொண்டு வந்தது. அப்போது அவனுக்கு தான் செய்த கொடுமையான செயல்கள் நினைவுக்கு வந்தன.

தனக்கு முக்தியே இல்லை என்று வருந்தினான். யம தூதர்கள் வந்தனர். அந்த ஜீவனை பிடித்தனர். தான் செய்த தவறுகளுக்கு இதைவிட கொடுமையான தண்டனைகள் வேண்டியிருந்தது என்று சொல்லி, அந்த யம தூதர்களை மகிழ்ச்சியுடனே வரவேற்றான் பௌண்ட்ரகன். அதற்குள் அங்கு விஷ்ணு தூதர்கள் வந்தனர். அவனுடைய சிரிப்பிற்குப் பின்னால் இருப்பது விஷ்ணு ஸ்மரணை என்று அந்த விஷ்ணு தூதர்கள் அறிந்தனர். இவனை யமதூதர்கள் கொண்டு செல்லக்கூடாதென்று, சிறிது நேரம் போர் புரிந்தனர். அந்த போரில், யம தூதர்கள் தோற்று, பௌண்ட்ரகனின் பிராணனை விட்டுவிட்டு, யம லோகத்திற்கு திரும்பினர்.

இதனைக் கேள்விப்பட்ட யமன் மிகவும் கோபம் கொண்டான் என்று சொல்லி, இன்னொரு ரகசியத்தை உனக்கு சொல்கிறேன் என்று, ஷௌனகாதிகள் மேலும் இவ்வாறு கூறினர். துளஸியின் ஸ்ரவண, துளஸி மகிமைகளின் கீர்த்தன, துளஸி சேவன, துளஸி அர்ச்சனெ, துளஸீயில் நிலைத்திருக்கும் ஸ்ரீஹரியின் ப்ரீதிக்காக வந்தன, தாஸ்ய பாவ, ஸக்ய, துளஸியில் இருக்கும் பரமாத்மனை

நினைத்து ஆத்ம நிவேதனம். இப்படியான நவவித பக்திகளால் கூடிய பக்தியை செய்த மனிதன்; மற்றும் துளஸி நிர்மால்யத்தை ஏற்றுக் கொண்டால், பரிகாரம் ஆகாத பாபமே இல்லை. இத்தகைய துளஸியின் மேல் பட்டு வந்த காற்று தாக்கினாலும், அவர்கள் பாவங்களிலிருந்து முக்தர் ஆகின்றனர்.

இவ்வாறு துளஸி வாயு பட்ட மனிதனை யம தூதர்கள் தொடக்கூடாது என்று கூறினான். பாபிகளுக்கு தண்டனை கொடு. இதுவே உன் வேலை. யார் துளஸியை பார்த்து வணங்குவதில்லையோ, யார் துளஸியை அர்ப்பிப்பதில்லையோ, அத்தகைய பாவிகளை இழுத்து வா. இதே உன் சேவை. இதனை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறினான் பரமாத்மா. இதுவே ஸ்காந்த புராணத்தில் வரும் விஷயம் ஆகும்.

பௌண்ட்ரகன், சித்ரகுப்தர்களை அழைத்து, தான் செய்த செயல்களைப் பற்றி கூறினான். அவன் புண்ணிய கர்மங்கள் எதையும் செய்ததாக தகவல் இல்லை. யமனும் இதைப் பற்றி விசாரித்து வியப்படைந்தான். எந்த புண்ய கர்மத்தின் விசேஷத்தினால் இவனுக்கு புண்ணிய லோகம் கிடைத்தது என்று தெரியவில்லை. துஷ்கர்மங்களை செய்த இவனுக்கு எப்படி சத்கதி கிடைத்தது. இவற்றிற்கான பதிலை அறிவதற்கு, விஷ்ணுவையே கேட்டு விடலாம் என்று எண்ணி, விஷ்ணு லோகத்திற்கு சென்றனர்.

அங்கு பிரம்மாதி சுரர்களால் வணங்கப்படுபவனான ஸ்ரீஹரியைக் கண்டு யமன், தன் சந்தேகங்களை கேட்டான். 'மிகவும் துராசாரியான அவன், அவனுடைய கணக்கில் எங்கும் ஒரேயொரு புண்ணிய கர்மங்கள் கூட இல்லை. உன்னை நினைக்காமல் இருந்தாலும் உன் உலகம் கிடைத்திருக்கிறது. இதற்கு என்ன காரணம்?' - என்று கேட்டான்.

ஸ்ரீஹரியும் - 'பௌண்ட்ரகன் மகா பாபி. இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இவன் எந்த புண்ணியத்தையும் சம்பாதிக்கவில்லை. ஆனாலும், தெய்வ யோகத்தினால் ஒரு புண்ய கர்ம இவனுக்கு வந்திருக்கிறது. கடைசி காலத்தில் துளஸி

வனத்தை தொட்ட காற்று இவன் மேலும் பட்டிருக்கிறது. அந்த வாயு ஸ்பரிசத்தினால் இவனுக்கு என் நினைவு வந்திருக்கிறது. இவ்வாறு இவன் புனீதன் ஆகியிருக்கிறான். பாபங்கள் அனைத்தும் போயின. இதனால் இவனுக்கு விஷ்ணு லோகம் கிடைத்துவிட்டது.

துளஸியின் மகிமைக்கு ஸ்வாமி கொடுத்த வரம்

அகல்யா - கௌதமரின் புத்திரரே ஷதானந்தர். மகா ஞானிகள். அனைத்து சாஸ்திரங்களையும் நன்றாக அறிந்தவர். ஒரு முறை ரிஷிகள் தமக்கு துளஸீயின் மகிமையை சொல்ல வேண்டும் என்று, பாப பரிஹாரிணியான துளஸி எப்படி அனைத்து புஷ்பங்களைவிட அதிகமாக இருக்கிறாள்? இதற்கு என்ன காரணம் என்று கேட்டார்.

இதைக் கேட்ட முனிகள் மிகவும் மகிழ்ச்சியுடன், நல்ல விஷயத்தையே கேட்டிருக்கிறீர்கள். யாருடைய சிரவணத்தினால் கோடி கோதான பலன் கிடைக்கிறதோ, அத்தகைய துளஸியின் சிரவணத்தினால், ஆயுள், பலம், ஒளி, செல்வங்கள் வளர்கின்றன. இந்த துளஸியின் மகிமையானது, ருத்ரதேவர் தம் மகனான ஸ்கந்தனுக்கு கூறிய அதி ரகசியமான விஷயம் ஆகும்.

துர்வாசரின் சாபத்தினால் தேவதைகள் ராஜ்யத்தை இழந்தனர். ஸ்வாமியை பிரார்த்தித்தனர். அவர்களின் பிரார்த்தனைக்கேற்ப, பரமாத்மன், பாற்கடலைக் கடைவதற்கு, வாசுகியை கயிறாக்கி, மந்தர மலையை மத்தாக்கி, தானே கூர்மனாகி, மறுபடி கடலில் மூழ்கிய மலையை தானே அஜித நாமகனாக தாங்கி, தானே தன்வந்திரி ரூபத்தினால் அமிர்த கலசத்தைப் பிடித்து வந்தான். இந்த மதனத்தினால் - கல்பவ்ருக்ஷ, காமதேனு, ஸுரபி, ஐராவத, உச்சைஸ்ரவஸ் குதிரை ஆகியவை தோன்றி வந்தன. பின் மகாலட்சுமியியும் வந்தாள். சந்திரன் மற்றும் அமிர்தமும் தோன்றின. அமிர்தம் வந்ததால் ஸ்வாமிக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று. தேவதைகளின் மேல் உள்ள கருணையால் பகவந்தனுக்கு ஆனந்தக்கண்ணீர் வந்தது, அங்கேயே துளஸி தோன்றினாள்.

# 7. துளஸியின் சேவை பாப பரிகாரம் செய்கிறது

முன்னர் கைலாய பர்வதத்தில் பார்வதிதேவிகூட துளஸியை பூஜித்தாள் என்னும் விசேஷ செய்தியை பிரகலாதராஜர் அடுத்து கூறுகிறார்.

ஒருமுறை கைலாயத்தில் பார்வதி பரமேஸ்வரர் மகிழ்ச்சியுடன் இருந்தனர். வைஷ்ணவர்களில் முதல்வரான ருத்ரதேவர், அனைத்து இடங்களிலும் பகவானையே கண்டு வந்தார். அந்த வனத்தில் மாதவி என்னும் மண்டபம் இருந்தது. அங்கு அமர்ந்திருந்த ருத்ரதேவரின் கண்களை, பார்வதிதேவி விளையாட்டிற்காக பின்புறத்திலிருந்து வந்து மூடினார். (உலகத்தையே ஒளிர்விக்கும் சூரிய, சந்திரர்கள் - ருத்ரதேவரின் கண்களில் இருக்கின்றனர். ருத்ரதேவரின் சேவையை அவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர்). அந்த நொடியில் சூர்ய சந்திரர்களின் மண்டலம் அனைத்தும் இருட்டாகியது. உலகில் அனைத்து செயல்களும் முடங்கின. பசு பக்ஷிகள் பிரச்னைகளுக்கு உள்ளாயின. பார்வதிக்கு நொடிப் பொழுதிலேயே ஆறு யுகங்கள் முடிந்தன. ருத்ரதேவர் தனது ஞான திருஷ்டியினாலேயே இதனை அறிந்து, தமது மூன்றாம் கண்ணினை திறந்தார்.

